நிறுவனத்தின் பெயர : நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. : *79*

பாராளுமன்றத்தின் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை சம்பந்தமாகநிலையியல் கட்டளை இலக்கம் *119(4)* இன் கீழ் மாண்புமிகு அமைச்சரின் அவதானிப்புகளையும் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளையும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. 79

அரசாங் க கணக்குகள் பற்றிய குழு

உள்ளடக்கம்

தொடர் இலக்கம்.	நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு சுற்றுலாத்துறை அமைச்சின் கீழ் காணப்படுகின்ற திணைக்களங்கள்	பக்க இலக்கம்
1.	நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு	3-4
2.	இலங்கை மதுவரித் திணைக்களம்	5-9
3.	உள்நாட்டு இறைவரித் திணைக்களம்	10-18
4.	இலங்கை சுங்கம்	19-24
5.	தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்	25-44
6.	விலைமதிப்பீட்டுத் திணைக்களம்	45-47
7.	சட்ட அலுவல்கள் திணைக்களம்	48-50
8.	இலங்கை மதுவரித் திணைக்களம்	51
9.	அரசாங்க விலைமதிப்பீட்டு திணைக்களம்	52
10.	பொதுத் தொழில்முயற்சி திணைக்களம்	53-55
11.	இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்	56-60
12.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்	61-62
13.	தேசிய திட்டமிடல் திணைக்களம்	63
14.	அரச கணக்குகள் திணைக்களம்	64
15.	வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களம்	65
16.	கொம்ப்ட்ரோலர் ஜெனரல் அலுவலகம்	66
17.	வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்	67
18.	முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம்	68
19.	அபிவிருத்தி நிதித் திணைக்களம்	69
20.	அரசிறைக் கொள்கைத் திணைக்களம்	70

திணைக்களத்தின் பெயர் : நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. : 79

நிலையியல் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்.

குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	தொடர்புடைய குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்காக நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
அபாய அட்டவணையை இற்றைப்படுத்தி பேணப்பட்டிருக்கவில்லை.	2022 ஆம் ஆண்டுக்கான அபாய அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது.
மீளாய்வு வருடத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் உரிய விதத்தில் நடாத்தப்பட்டிருக்கவில்லை.	நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் திறைசேரி திணைக்களங்கள் தொடர்பில் இரண்டாவது காலாண்டுக்கான கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்துவதற்காக தொடர்புடைய நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்ட போதிலும் அப்போது நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமையின் காரணமாக திட்டமிட்டவாறு இரண்டாவது காலாண்டுக்கான கூட்டத்தை நடத்த முடியவில்லை. ஏனைய காலாண்டுகளுக்குரிய கூட்டங்கள் பின்வருமாறு நடத்தப்பட்டுள்ளது. 1 ஆவது காலாண்டு - 2022.03.03 3 ஆவது காலாண்டு - 2022.08.22 4 ஆவது காலாண்டு - 2022.12.19
சகல வாகனங்களிலும் அரசாங்க இலச்சினை பொறிக்கப்பட்டிருக்கவில்லை.	அமைச்சுக்கு சொந்தமான ஒதுக்க வாகனங்களில் அரசாங்க இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளது. அமைச்சர்கள் மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகள் பயன்படுத்துகின்ற வாகனங்களில் பாதுகாப்பு காரணிகளின் அடிப்படையில் அரசாங்க இலச்சினை பொறிக்கப்படவில்லை.
ஒரு வருடத்திற்கும் மேலான காலத்திலிருந்து இருந்து வருகின்ற நிலுவை கடன் மீது காணப்படுகின்றமை	இடமாற்றம் பெற்ற, மரணித்த, ஓய்வு பெற்றுச் சென்ற, பணியிலிருந்து இடை நிறுத்தப்பட்ட 26 உத்தியோகத்தர்களிடமிருந்து ஒரு வருடத்திற்கு மேலாக அறவிட வேண்டியிருந்த ரூபா 3,528314.00 தொகையில் 21 உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகளின் மொத்தமாகிய ரூபா 909,403.00 தொகையை ஏற்கனவே அறவிட்டுக் கொள்வதற்கும் நி.ஒ. 113 இன் பிரகாரம் பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 09 உத்தியோகத்தர்களின் எஞ்சிய நிலுவை கடன் மீதிகளின் மொத்தமாகிய ரூபா 2,040,420.00 தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்ற அதேவேளையில் இரண்டு உத்தியோகத்தர்களின் ரூபா 469,418.00 கடன் நிலுவைகள் பற்றி நடவடிக்கை எடுப்பதற்கு சட்ட அலுவல்கள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் ஓர்

	உத்தியோகத்தரின் கடன் நிலுவை அறவிடப்பட்டு வருகின்றது.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. *79* இற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தொடர்பாக நிலையியல் கட்டளை இலக்கம் *119(4)* இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை மேற்குறிப்பிட்டவாறு தயவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்
மேலதிகப் பணிப்பாளர் நாயகம்
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

திணைக்களத்தின் பெயர் : இலங்கை மதுவரித் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. : 79

நிலையியல் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்.

இல	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளைத் திருத்துவதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலைமை
01	2022.12.13 ஆம் திகதியிட்ட 05/2022 ஆம் இலக்க அரச கணக்குத் திணைக்களத்தின் வழிகாட்டுதல்களின் படி 8.1 மற்றும் 8.2 பந்தியின் பிரகாரம் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் நிலையான சொத்துக்கள் தொகுதி இன்றுவரை பேணப்படவில்லை.	2022.12.13 ஆம் திகதியிட்ட 05/2022 ஆம் இலக்க அரச கணக்குத் திணைக்களத்தின் வழிகாட்டுதல்களின் படி 8.1 மற்றும் 8.2 பந்தியின் பிரகாரம் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் நிலையான சொத்துக்கள் தொகுதி புதுப்பித்த நிலையில் பராமரிக்கப்படுகிறது.
02	ஆபத்துக்கள் பற்றிய பதிவேடு கால அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை	ஆபத்துக்கள் பற்றிய பதிவேடு புதுப்பித்த நிலையில் பராமரிக்கப்படுகிறது.
03	2004.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மென்பொருள் தொடர்பான முதலாவது கடவுச்சொல்லை கணக்காளர் அல்லது அவரிடம் அனுமதி பெற்றுள்ள பதவிநிலை உத்தியோகத்தர் மட்டும் பயன்படுத்தவில்லை. 2004.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மென்பொருள் தொடர்பான முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் கடவுச்சொற்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாற்றப்படவில்லை.	2004.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க சம்பளப் பட்டியல் மென்பொருள் கடவுச்சொல் மாற்றப்பட்டுள்ளது
04	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் அனுப்பப்படவில்லை. உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமைக்கான சந்தர்ப்பங்கள் காணப்பட்டிருந்தன.	இத்திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்கு மேலதிகமாக 108 பிராந்திய அலுவலகங்களும் உள்ளன. கணக்காய்வு வினாக்களுக்கான பதில்கள் பிராந்திய அலுவலகங்களிலிருந்து பெறப்பட்டு, கணக்காய்வுக்கான பதில்கள் பெறப்படுகின்றன. கணக்காய்வுக்கான கேள்விகளுக்கு இதுவரை விரைவாக பதிலளிக்கப்பட்டுள்ளது. எனினும், திணைக்களத்தில் அதிகாரிகள் பற்றாக்குறையானது கடமைகளில் தாமதத்தை ஏற்படுத்தியுள்ளது.
05	2020.08.28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பகுதி I இன் 11.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் நி.ஒ.756 (6) இன் பிரகாரம்	2020.08.28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், வருடாந்த கணக்கெடுப்புச் சபை கால

	பொருள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு குறித்த தினத்தில் உரிய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாமை. வருடாந்த பொருள் கணக்கெடுப்பு மூலம் வெளிக்கொணரப்பட்ட மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய விதப்புரைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவில்லை.	அட்டவணைப்படி நடாத்தப்பட்டுள்ளதோடு, குறித்த அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. வருடாந்த கணக்கெடுப்பு சபையில் வெளிப்படுத்தப்பட்ட மிகையான மற்றும் பற்றாக்குறை பற்றிய பரிந்துரைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.
06	ஒதுக்க வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அனைத்து வாகனங்களிலும் தேசிய சின்னம் வரையப்படவில்லை. ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பிலும் நி.ஒ. இன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	22.02.2022 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம், நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் தனித்தனியாக கணக்காய்வு பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மதுவரி திணைக்களத்தின் பெரும்பாலான வாகனங்கள் பறிமுதல் பணிகளுக்காக ஒதுக்கப்படுவதால், தேசிய அடையாளத்தை வெளியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கணக்காய்வு விசாரணையை அனுப்பிய நேரம் வரையான நி.ஒ விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
07	உரிய திகதியில் வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரித்து உறுதிப்படுத்தி அவை கணக்காய்வின் பொருட்டு சமர்ப்பிக்கப்படவில்லை.	வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டு, சான்றுப்படுத்தப்பட்டு, உரிய திகதிகளில் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. தற்போது, 2024 ஜூலைக்கான வங்கி கணக்கிணக்க அறிக்கைகள் 2024 ஆகஸ்ட் 09 அன்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
08	குறித்த திகதியைத் தாண்டி ஏனைய நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.	குறித்த திகதியைத் தாண்டி வேறு நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் எதுவும் செய்யப்படவில்லை.
09	ஓராண்டுக்கும் மேலாக காணப்படும் நிலுவைக் கடன் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கப்படவில்லை.	**உயிரிழந்த அதிகாரிகளின் எண்ணிக்கை 06 ஆகும்.** • ஒரு அதிகாரி சட்டமா அதிபர் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். • ஏனைய அலுவலர்கள் தொடர்பில் இறப்பு பணிக்கொடை அறவிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **பணிநீக்கம் செய்யப்பட்ட, இராஜினாமா செய்த மற்றும் பணி விலகல் செய்யப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை 11 ஆகும்.** • தற்போது 5 அதிகாரிகள் சட்டமா அதிபர் முன்னிலையில்

		ஆஜர்படுத்தப்படும் நடவடிக்கையில் உள்ளனர். • ஒரு அதிகாரி ஏற்கனவே சட்டமா அதிபருக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளார். • *2004 சுற்றுநிருபம் 01/2004* இன் கீழ் கடன் தீர்வுகளுக்காக மூன்று அலுவலர்கள் திறைசேரியின் **செயலாளருக்கு** ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளனர். • மீதமுள்ள அலுவலர்கள் தொடர்பான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. **ஒய்வு பெற்ற அதிகாரிகளின் எண்ணிக்கை *13.*** • இன்னும் இரண்டு அதிகாரிகளிடமிருந்து கொடுப்பனவுகள் நிலுவையில் உள்ளன. **இடைநிறுத்தம் செய்யப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை *14.*** • மூன்று அதிகாரிகள் சட்டமா அதிபரிடம் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர். • ஐந்து அதிகாரிகள் சட்டமா அதிபருக்கு ஆஜர்படுத்தப்படும் நடவடிக்கையில் உள்ளனர். • இரண்டு அதிகாரிகள் மீண்டும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். • மீதமுள்ள அலுவலர்கள் தொடர்பான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன
10	காலாவதியான வைப்புகள் தொடர்பாக நிதி ஒழுங்குவிதிகள் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	காலாவதியான வைப்புகள் தொடர்பாக நிதி ஒழுங்குவிதிகள் 571 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
11	மீளாய்வு ஆண்டு நிறைவில் நிதியேட்டின் நிலுவை திறைசேரி தொழிற்பாட்டு சுற்றுநிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டு உரிய தினத்துக்கு திறைசேரி தொழிற்பாட்டு திணைக்களத்துக்கு பணம் அனுப்பப்படவில்லை.	ஆண்டு நிறைவில் நிதியேட்டின் நிலுவை திறைசேரிக்கு அனுப்பப்படுகின்றது
12	நி.ஒ 371 இன் பிரகாரம் வெளியிடப்பட்ட பணி குறித்த இடைக்கால கட்டு நிதி ஒரு மாதத்துக்குள் செலுத்தி தீர்க்கப்படவில்லை.	ஒரு மாத காலத்திற்குள் இடைக்கால கட்டு நிதிக்கு தீர்வு காண ஏற்பாடு செய்யப்படும்.
13	கட்டு நிதி கணக்கிணக்கக் கூற்றுக்கு அமைய அறிக்கையில் கண்டறியப்பட்ட வேறுபாடுகளை அடையாளம் கண்டு	கட்டு நிதி கணக்கிணக்கக் கூற்றுக்கு அமைய அறிக்கையில் வேறுபாடுகள் கண்டறியப்பட்டு மாதந்தோறும் சரி செய்யப்படுகிறது

	செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	
14	ஏற்புடைய ஏற்பாடுகளுக்கு அமைவாக திரட்டப்பட்ட வருமானம் மீளச் செலுத்தப்பட்டிருக்கவில்லை திரட்டப்பட்ட வருமானம், நேரடியாக வருமானத்துக்கு வரவு வைக்கப்பட்டு அல்லது அவற்றை வைப்புக் கணக்கில் வைப்பிலிட்டு ஒரு மாதத்துக்கு குறைவான காலப்பகுதியில் வருமானக் கணக்கில் வரவு வைக்கப்படாமை.	திரட்டப்பட்ட வருமானம் சரியாக கணக்கிடப்படுகின்றன.
15	1994.04.20 ஆம் திகதிய இலக்கம் 30/94 ஆம் அரசாங்கக் கணக்குச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நிறுவனத்தினால் பெறப்பட்ட வெளிநாட்டு மானியங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. வெளிநாட்டு மானியமாக பெறப்பட்ட மொத்தப் பணமும் நிறைசேரியின் பிரதிச் செயலாளரின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கிற்கு அனுப்பப்படவில்லை.	இந்த திணைக்களம் 2022 ஆம் ஆண்டில் எந்த வெளிநாட்டு மானியத்தையும் பெறவில்லை.
16	பகுதி இரண்டு கேட்கப்படுகின்ற தகவல்களை வழங்காதிருத்தல் சம்பந்தமாக முன்வைக்கப்படுகின்ற முறைப்பாடுகளை பதிதல் மற்றும் அது சம்பந்தமாக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் பற்றி தெளிவுபடுத்துகின்ற பதிவேடுகள் பேணிவரப்படவில்லை	மதுவரித் திணைக்களத்தின் 1913 செயற்பாட்டு அறைக்கு பொதுமக்களால் பதிவு செய்யப்படும் அனைத்து முறைப்பாடுகளும் உடனடியாக *ecms.excise.gov.lk* முறைமையில் பதிவு செய்யப்பட்டு முறைமையின் மூலம் சம்பந்தப்பட்ட உதவி மதுவரி ஆணையாளர், மதுவரி அத்தியட்சகர் மற்றும் மதுவரி நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் ஆகியோருக்கு அனுப்பப்படுவதுடன், முறைப்பாடுகள் தொடர்பான இணைய தரவு முறைமையொன்று பேணப்படுகிறது. நாட்டின் எந்தவொரு மதுவரி நிலையத்திலிருந்தும் பொதுமக்கள் கோருகின்ற தகவல்களை மேற்படி முறைமையின் ஊடாக வழங்க முடியும். மேலும், **தேவைப்படின்** சம்பந்தப்பட்ட அனைத்து முறைப்பாடுகள் தொடர்பான விபரங்களையும் பதிவு செய்து ஆவணப்படுத்தவும் முடியும்.
17	2018.01.24 ஆம் திகதிய இலக்கம் 05/2018(1) இன் திருத்த சுற்றறிக்கையில் 2008.02.06 ஆம் திகதியிடப்பட்ட பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 05/2008 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பிரஜைகள்/ வாடிக்கையாளர் சாசனம் முறையாக தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்படவில்லை.	சுற்றறிக்கையின் வழிகாட்டல்களுக்கு அமைய பிரஜைகள்/ வாடிக்கையாளர் சாசனத்தை தொகுத்து நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

	நிறுவனத்தின் பிரஜைகள்/ வாடிக்கையாளர் சாசனம் அமுலாக்கப்படுதல் பற்றி மேற்பார்வை செய்வதற்கும் மதிப்பீடு செய்வதற்குமான முறையியலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	
18	2018 ஜனவரி 24 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் ஏற்பாடுகளுக்கு இணங்க முறையான மனிதவளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை	இதற்கான மனிதவள திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.
19	ஒட்டுமொத்த பணியாட்டொகுதியும் உள்ளடங்கத்தக்கதாக செயலாற்றுகை உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.	செயலாற்றுகை உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
20	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகள் மூலமாக வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50%ஐ பார்க்கிலும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது	2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில், நாட்டில் கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக திட்டமிட்ட பயிற்சிகளை நடத்த முடியவில்லை. இருப்பினும், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில், உத்தியோகத்தர் பயிற்சிகள் திட்டமிட்டபடி நடத்தப்பட்டுள்ளன.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல.79 இற்காக இலங்கை மதுவரித் திணைக்களம் தொடர்பாக நிலையியல் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை மேற்குறிப்பிட்டவாறு தயவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்
மதுவரி ஆணையாளர் நாயகம்
இலங்கை மதுவரித் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. : *79*

நிலையியல் கட்டளை இலக்கம் *119(4)* இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலைமை.
01	2022.12.13 திகதிய 2022/05 ஆம் இலக்க அரசாங்கக் கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டலின் 8.1 மற்றும் 8.2 பந்திகளின் பிரகாரம் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் நிலையான சொத்துக்கள் மொடியூல் இற்றைப்படுத்திப் பேணி வரப்பட்டிருக்கவில்லை.	2022 ஆம் ஆண்டின் போது 2022/05 ஆம் இலக்க அரசாங்கக் கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டலின் 8.1 மற்றும் 8.2 ஆம் இலக்க பந்திகளுக்கமைய சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் நிலையான சொத்துக்கள் மொடியூல் இற்றைப்படுத்தப்பட்டு பேணி வரப்படுகின்றது.
02	சேதங்கள் தொடர்பான ஆவணம் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படவில்லை.	சேதங்கள் தொடர்பான ஆவணம் இற்றைப்படுத்தப்பட்டு பேணி வரப்படுகின்றது.
03	ஆபத்துக்கள் ஆவணம் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படவில்லை	ஆபத்துக்கள் தொடர்பான ஆவணமொன்றை தயாரிப்பதற்கான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
04	கணக்காய்வாளர் நாயகம் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த எல்லாக் கணக்காய்வு விசாரணைகளுக்காவும் ஒரு மாத காலத்தினுள் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் கணக்காய்வு விசாரணைகளுக்காக உரிய தினத்தில் பதில்களை வழங்குவதற்கு உயர்ந்த பட்ச முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றது. இருப்பினும் பின்வரும் காரணங்களினால் சில சந்தர்ப்பங்களின்போது உரிய தினத்தில் பதில்களை வழங்குவதற்கு தாமதங்கள் ஏற்படமுடியும். • COVID தொற்றுக் காரணமாக அரச அலுவலகங்களுக்கு அலுவலர்களை வரவழைத்தல் வரையறுக்கப்பட்டிருந்தமை. • 06 மாத கால எல்லையின் இறுதி சில மாதங்களின்போது ஆகக் குறைந்த பணியாட் குழுவினருடன் பாரியளவு வருமான இலக்கை அடைந்து கொள்வதற்கு முன்னுரிமை வழங்கியமை (அனுமதிக்கப்பட்ட பணியாட்

		குழுவில் 1/3 வரையானளவு வெற்றிடம் காணப்பட்ட போது) • அதற்கு மேலதிகமாக பூரணப்படுத்தப்பட வேண்டிய ஏனைய ஊக்குவிப்புப்படி இலக்குகள் (வரி பதிவு செய்தல் போன்ற) தொடர்பான அலுவல்களுக்காக கணிசமானளவு காலமொன்று செலவாகுதல். • பணியாட்குழுவினருக்காக அவ்வப்போது நடாத்தப்படுகின்ற பயிற்சிகளுக்காக காலங்கள் செலவாகுதல். • ஒரே பிரிவிற்கு அதிகளவு கணக்காய்வு விசாரணைகள் கிடைக்கின்ற காரணத்தால் அனைத்துக்கும் உரிய தினத்தில் பதில் வழங்குவது அசௌகரியமானதாக அமைதல். உதாரணம் :- RAMIS
05	உள்ளகக் கணக்காய்வு விசாரணைகளுக்காக ஒரு மாத காலத்தினுள் பதிலளிக்கப்படாத சந்தர்ப்பங்களும் அறிக்கையிடப்பட்டன.	உள்ளகக் கணக்காய்வு விசாரணைகளுக்கு உரிய தினத்தில் பதில் வழங்குவதற்கு உச்சளவான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இருப்பினும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களினால் சில சந்தர்ப்பங்களின் போது உரிய தினத்தில் பதிலளிப்பதில் தாமதங்கள் ஏற்படமுடியும். • COVID தொற்றுக் காரணமாக அரச அலுவலகங்களுக்கு அலுவலர்களை வரவழைத்தல் வரையறுக்கப்பட்டிருந்தமை. • 06 மாத கால எல்லையின் இறுதி சில மாதங்களின்போது ஆகக் குறைந்த பணியாட் குழுவினருடன் பாரியளவு வருமான இலக்கை அடைந்து கொள்வதற்கு முன்னுரிமை வழங்கியமை (அனுமதிக்கப்பட்ட பணியாட் குழுவில் 1/3 வரையானளவு வெற்றிடம் காணப்பட்ட போது) • அதற்கு மேலதிகமாக பூரணப்படுத்தப்பட வேண்டிய ஏனைய ஊக்குவிப்புப்படி இலக்குகள் (வரி பதிவு செய்தல் போன்ற) தொடர்பான அலுவல்களுக்காக கணிசமானளவு காலமொன்று செலவாகுதல்.

		• பணியாட்குழுவினருக்காக அவ்வப்போது நடாத்தப்படுகின்ற பயிற்சிகளுக்காக காலங்கள் செலவாகுதல்.
06	மீளாய்வு வருடத்தினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் உரியவாறு நடாத்தப்பட்டிருக்கவில்லை.	அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம்.16/2022 மற்றும் அதன் பின்னர் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கமைய அரச அலுவலகங்களுக்கு அலுவலர்களை வரவழைத்தல் வரையறுக்கப் பட்டிருந்தமையினால் 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்படவிருந்த 04 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் இரண்டாம் காலாண்டுக்குரிய கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டத்தை நடாத்த முடியவில்லை என்பதைத் தயவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.
07	2017.06.26 ஆம் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் புறத்தொதுக்கல்கள் தொடர்பான தகவல்கள் கொம்றோலர் நாயகம் அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	ஒவ்வொரு காலாண்டிலும் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் புறத்தொதுக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இல.01/2017 அமைய கொம்றோலர் நாயகம் அலுவலகத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
08	2020.08.28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 1 ஆம் பகுதியின் 11.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காலச் சட்டகத்தினுள் நி.ஒ.வி. 756(6) இன் பிரகாரம் பண்டக் கணக்கெடுப்புச் செய்யப்பட்டு உரிய தினத்தில் குறித்த அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.	2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான பண்டக்கணக்கெடுப்பு நடாத்தப்பட்டு உரிய அறிக்கை கணக்காய்வுப் பிரிவுக்கு 2023.05.11 ஆம் திகதியாகும்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பண்டங்களைப் புறத்தொதுக்கல் அறிக்கை 2023.11.11 ஆம் திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
09	வருடாந்த பண்டக் கணக்கெடுப்பில் தெரிய வந்த மிகை, குறைபாடு தொடர்பான பரிந்துரையும் ஏனைய பரிந்துரைகளும் உரிய காலப்	2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான பண்டக்கணக்கெடுப்பு அறிக்கை மூலம் இனங்காணப்பட்ட மிகை மற்றும் குறைபாடுகளுக்குரியதாக சில பிரிவுகளில் சீராக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு ஏனைய

	பகுதியினுள் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை.	பிரிவுகளுக்காக இனங்காண்பதற்கான பணிகள் மேற் கொள்ளப்பட்டுவருகின்றன. மேலும் நிதியல்லாச் சொத்துக்கள் முகாமைத்துவத்துக்குரிய அனைத்து சுற்றறிக்கைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கமைய முறையான விதத்தில் ஒவ்வொரு பிரிவுகளதும் பட்டியலிடப்பட்ட பண்டங்களின் ஆவணத்தை பேணி வருமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதோடு அது தொடர்பில் போதுமானளவு மேற்பார்வையொன்றை மேற் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
10	அனைத்து வாகனங்களதும் அரச இலட்சனை வர்ணம் தீட்டப்பட்டிருக்கவில்லை.	விசாரணை கடமைகளுக்காக இந்த வாகனம் பயன்படுத்தப்படுகின்றமையினால் அரச இலட்சனை வர்ணம் தீட்டப்படவில்லை.
11	வாகனமொன்று தீர்த்தொதுக்கப்பட்டு 8 மாதங்களைவிட குறைந்த காலப்பகுதியின் போது புறத்தொதுக்கப்பட்டிருக்கவில்லை.	புறத்தொதுக்க வேண்டிய வாகனங்களை இனங்காண்பதற்காக விசேட மதிப்பாய்வுக் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதோடு குறித்த பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்ட அறிக்கை கிடைத்த பின்னர் தேவையான எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
12	அரச வாகனங்களின் விபத்து தொடர்பில் நிதிஒழுங்கு விதிப் பிரகாரம் உரியவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நி.ஒ.வி. பிரகாரம் பரிசீலனைக் குழு நியமனம் செய்யப்பட்டு அந்தப் பணிகளை மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
13	ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமொன்று தொடக்கம் இருந்து வருகின்ற நிலுவைக் கடன் மீதிகள் காணப்பட்டன.	அறவிட்டுக் கொள்ள முடியாத நிலுவைக்கடன் மீதிகளுக்காக அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம்.01/2024 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும், ஏனைய கடன் மீதிகளை காலதாமதமின்றி அறேவிட்டுக்கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
14	பொதுவைப்புக் கணக்கின் காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பில் நி.ஒ.வி. 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.	பொதுவைப்புக் கணக்கின் 2022.02.28 ஆம் திகதியாகும்போது காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பில் ஏற்கனவே நி.ஒ.வி.571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திணைக்களத்தின் பெறுகை மற்றும் சொத்துக்கள்

		முகாமைத்துவ பிரிவிற்குரிய 2022 ஆம் ஆண்டு மார்ச் 29 ஆம் திகதி வைப்புச் செய்யப்பட்ட ரூபா.5000/= தொகையை சீராக்கம் செய்வதற்காக உரிய நிறுவனத்திற்குத் தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
15	நி.ஒ.வி. 371 இன் பிரகாரம் விநியோகிக்கப்பட்ட ஒரு நிமித்த உப கட்டுநிதி குறித்த பணி நிறைவடைந்து ஒரு மாத காலப்பகுதியினுள் செலுத்தி சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.	ஒரு நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்ட தினத்திலிருந்து 10 நாட்களுக்குக் குறைவான காலமொன்றினுள் கட்டுநிதியைச் செலுத்தித் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
16	நி.ஒ.வி. 371 இன் எல்லைகளை மேவி ஒரு நிமித்த உப கட்டுநிதி விநியோகிக்கப் பட்டிருந்தது.	நி.ஒ.வி.371 இன் எல்லைகளினுள் ஒரு நிமித்த உப கட்டுநிதியை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் :- 79

நிறுவனத்தின் பெயர் :- உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

இரண்டாம் பகுதி :- 76.00

	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமை.
01	மொத்த பணியாட்குழுவை உள்ளடக்கியதாகச் செயலாற்றுகை ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.	அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 02/2018(I) இற்கமைய “வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தம்” கைச்சாத்திடுவது தொடர்ந்தும் அவசியமற்றது. குறித்த சுற்றறிக்கையின் பிரதியொன்று இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு - 01)
02	திட்டமிடப்பட்ட பயிற்சிச் சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த பயிற்சிச் சந்தர்ப்பங்கள் 50% ஐ விடக் குறைவான மட்டத்தில் காணப்பட்டன.	100% பூரணப்படுத்தப்பட்டுள்ளது.
03	நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வின் அபிப்பிராயம் கீழ் மட்டத்தில் / மறுக்கும் மட்டத்தில் / பாதகமான மட்டத்தில் காணப்பட்டது.	நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வின் அபிப்பிராயம் தொடர்பில் ஏற்புடைய “கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை” - 2022 - 1.6.1 மற்றும் 1.6.2” விடயங்கள் தொடர்பில் ஏற்கனவே பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 1.6.1.1 & 1.6.1.2
04	கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கையின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	

வருமானக் கட்டுப்பாடு தொடர்பாக ஒவ்வொரு வரி வகைக்கும் உரிய வரி செலுத்துநர்களால் செலுத்தப்பட்ட வரி வருமானம் (திணைக்களத்தின் கூற்றுக்கமைய திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற வருமானம்) மற்றும் திறைசேரிக்குக் கிடைக்கப்பெற்றதாக உறுதி செய்யப்படுகின்ற வருமானம் ஆகியவற்றை ஒப்பிடும்போது பின்வரும் காரணங்களால் மேற்படி இரண்டு தொகுதிகளுக்கிடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

- OTTP இன் கீழ் மாதத்தின் இறுதித் தினம் பி.ப. 3.00 மணியின் பின்னர் செய்யப்படுகின்ற கொடுப்பனவொன்று அதற்கடுத்த மாதத்தின் முதலாவது நாள் திறைசேரிக்கு மாற்றப்படுகின்றமை மற்றும் திணைக்களக் குறிப்புக்களில் செலுத்தப்பட்ட தினத்திற்கு உரியதாகப் பதியப்படுதல்.
- வங்கிகளினால் இடம்பெறுகின்ற தவறுகளின் (Bank Error) போது சில கொடுப்பனவுகள் தொடர்பாக சீராக்கம் செய்வதற்குக் காலதாமதம் ஏற்படல்.
- காசோலைகள் மறுக்கப்படுதல் காரணமாக.

1.6.1.3

கட்டுப்பாட்டுக் கணக்கில் எஞ்சியுள்ள மீதி பல்வேறு வரி வகைகளுக்குரிய பொதுவான பெறுமதியொன்றென்பது தெரியவருகின்றது. ஒவ்வொரு வரி வகைகளுக்குமுரிய தேறிய பெறுமதியை இனங் காண்பது அசௌகரியமானது என்பதால் பொதுப் பெறுமதியொன்றெனக் காட்டப் படுவதோடு, இந்த மீதியினுள் பெறுமதி சேர் வரிக்குரிய பகுதியொன்றும் காணப்பட முடியும். வரி செலுத்தும்போது வரி செலுத்துநர் கொடுப்பனவு செய்வது பெறுமதி சேர் வரியாக (000000000-7000) என்பதால் அந்த வரி நிதிச் சேவை, உற்பத்தி அல்லது ஏனைய சேவைகள் என வேறுபடுத்த முடியாது. இருப்பினும் அடுத்த

		மாதத்தின் போது அந்த மீதிக்குரிய கொடுப்பனவு குறித்த TIN இற்கு செலவு வைக்கப்படும்போது சரியான வருமான குறியீட்டிற்கு வேறுபடுத்தப்படும். இது தொடர்ச்சியாக இடம்பெறுகின்ற செயற்பாடு ஒன்றென்பதால் ஏதேனும் ஒரு தினத்திற்கு இந்த மீதியைப் பூச்சியமாகக் காட்ட முடியாது. 1.6.2 நிதியல்லாச் சொத்துக்கள் • நுவரேலியாப் பிராந்திய அலுவலகம் அமையப்பெற்றுள்ள காணி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கில் பதியப்பட்டுள்ளது. குருநாகல் பிராந்திய அலுவலகம் அமையப்பெற்றுள்ள காணிக்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வசம் உரித்துப் பத்திரமொன்றில்லை. இருப்பினும் ஏற்கனவே எல்லைக் காணிகளின் உறுதிப் பத்திரங்களின் மூலம் இதன் உரித்தை உறுதி செய்து கொள்வதற்காக குருநாகல் பிராந்திய அலுவலகத்தின் ஆணையாளர் அவர்களினால் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் உரித்து உறுதி செய்யப்பட்டதன் பின்னர் மதிப்பீட்டு அறிக்கையொன்றைப் பெற்றுக் கொண்டு ஏனைய அலுவல்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப் பட்டுள்ளது. • 2021.12.31 ஆம் திகதியில் காணப்பட்ட சொத்துக்கள் அகற்றப்பட்டு 2022 ஆம் ஆண்டில் CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் அனைத்துச் சொத்துக்களும் மீண்டும் கணக்கில் பதியப்பட்டுள்ளன. இந்த 05 வாகனங்களும், 2022 ஆம் ஆண்டில் பொலிஸ் திணைக்களத்திற்குக் பொறுப்பளிக்கப் பட்டிருப்பினும் அது 2021 இல் ஒப்படைப்பு ஒன்றாகக் கருதி மீண்டும் சொத்துக்களில் உட்சேர்க்கும் போது கவனக்குறைவினால்

		அந்தப் பெறுமதி நீக்கப்பட்டு ஆரம்ப மீதி உட்சேர்க்கப்பட்டுள்ளது. இருப்பினும், 2022.12.31 ஆம் திகதி வாகனங்களில் பெறுமதி சரியாக ரூபா. 246,787,150 /= என பதியப் பட்டுள்ளது. வருடத்தினுள் புறத்தொதுக்கல் (disposal) என உள்ளடக்கப்படவில்லை எனினும் ஆரம்ப மீதியிலிருந்து அந்தப்பெறுமதி நீக்கப்பட்டு குறைவாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இருப்பினும் இறுதி மீதி சரியானதாகும்.
05	அரச கணக்குகள் தொடர்பான குழுவின் பரிந்துரைகள் / உத்தரவுகள் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை.	• RAMIS கருத்திட்டத்தின் கீழ் தற்போது இணைக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை 07 ஆகும் என்பதோடு அது கீழே காட்டப்பட்டுள்ளது. 1. இலங்கை சுங்கத் திணைக்களம் 2. கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் 3. இலங்கை வங்கி 4. நிதியமைச்சு 5. இலங்கை கிளியர் தனியார் கம்பனி 6. மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் 7. மக்கள் வங்கி RAMIS கருத்திட்டத்தின் கீழ் இணைத்துக் கொள்வதற்கு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிறுவனங்கள் 06 ஆகும். அவையாவன, 1. வங்கிகள் 2. நிதி நிறுவனங்கள் 3. பங்குச் சந்தைகள் 4. பதிவாளர் நாயகத் திணைக்களம் 5. குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் 6. மது வரித் திணைக்களம் • மறுக்கப்பட்ட காசோலைகள் தொடர்பில் 2378/33 ஆம் இலக்க 2024.04.04 ஆம் திகதிய வர்த்தமானிப் பத்திரத்தின் கீழ் வருமான

		வரிக்காக காசோலைகளைக் கையேற்றல் இடை நிறுத்தப்பட்டுள்ளது. (இணைப்பு - 02)
06	அலுவலர்களினால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பில் நி.ஒ.வி 156(1) இன் பிரகாரம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	குறித்த காலப் பகுதியினுள் செய்யப்பட்ட பரிசீலனைகளின் போது 156 (1) இன் கீழ் செயற்படுதல் எல்லையை விஞ்சிய சம்பவங்கள் அறிக்கையிடப்படவில்லை.
07	நி.ஒ.வி 119 இன் பிரகாரம் அறவிடப்படவேண்டிய மிகைவிதிப்பு அறவிடப்பட்டிருக்கவில்லை.	மிகவிதிப்பை அறவிடுவதற்கு குறித்த எல்லையை விஞ்சிய சம்பவங்கள் அறிக்கையிடப்படவில்லை.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. *79* இற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தொடர்பாக நிலையியல் கட்டளை இலக்கம் *119(4)* இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை மேற்குறிப்பிட்டவாறு தயவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்
பணிப்பாளர் நாயகம்
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : இலங்கை சுங்கம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. : *79*

நிலையியல் கட்டளை இலக்கம் *119(4)* இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்.

தொடர் இல.	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள் / குழுவால் வழங்கப்பட்ட கட்ளைகள்	குறைபாடுகளை சரிசெய்ய நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கைகள் / கட்ளைகளை நிறைவேற்றுதல் / தற்போதைய நிலை
முதலாம் பிரிவு : 83.00		
1	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் அனுப்பப்பட்டிருக்காமை.	சுங்கத் திணைக்களத்தின் பல்வேறுபட்ட பிரிவுகளிலிருந்து தகவல்களைத் திரட்டி இறுதி அறிக்கை தயாரிக்கப்படுவதால் சற்று கால தாமதங்கள் ஏற்படலாம், ஆயினும், ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஒரு மாத காலத்திற்குள் பதிலளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
2	உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமைக்கான சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை	கணக்காய்வு ஐய வினாக்களை சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அனுப்புகையில், 14 நாட்களுக்குள் பதிலளிக்குமாறு முகப்புக் கடிதம் மூலம் கோரப்படுவதுடன், நினைவூட்டல் கடிதங்களும் அனுப்பப்படுகின்றன. மேலும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களிலும் இது தொடர்பில் அறிவிக்கப்படுகின்ற.
3	மீளாய்வுக் காலப்பகுதியினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் உரிய காலத்தில் நடாத்தப்பட்டிருக்காமை	நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடி காரணமாக, வரையறுக்கப்பட்ட அலுவலர்கள் பணிக்கு வருகை தந்ததோடு, போக்குவரத்தில் ஏற்பட்ட சிரமங்கள் காரணமாக உரிய முறையில் கூட்டங்களை நடத்த முடியாமற் போனதுடன், 2023 ஆம் ஆண்டில் திட்டமிட்டபடி கூட்டங்கள் முறையாக நடாத்தப்பட்டுள்ளன.
4	வருடாந்த பொருள் கணிப்பாய்வு மூலம் வெளிக் கொணரப்பட்ட மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய	2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான பொருள் கணிப்பாய்வு சபையால் கண்டறியப்பட்ட பற்றாக்குறைகள் –

	விதப்புரைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டிருக்காமை.	மிகைகள் குறித்து உரிய முறையில் செயற்பட்டு, சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவித்துள்ளதோடு, அதற்கமைய, அடுத்த கட்ட நடவடிக்கைகளைத் தொடருவதற்கும்எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறே, பொது 47 இல் குறிப்பிடப்பட்டுள்ள பண்டங்களை அகற்றுவதற்காக குழுவொன்றினையும் ஏற்படுத்தி தற்போது செயற்பட்டு வருகிறது. பணிகளை துரிதமாக பூரணப்படுத்தி, கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும், அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கும் அறிக்கையிடுவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.
5	அனைத்து வாகனங்களிலும் தேசிய சின்னம் வரையப்பட்டிருக்காமை.	சுங்கச் சுற்றி வலைப்பின் போது சுங்க வாகனங்களில் தேசிய சின்னம் அல்லது சுங்க சின்னம் பொறிக்கப்பட்டிருப்பின் அது குறித்த சுற்றி வலைப்புக்களை இரசகசியமாக மேற்கொள்வதற்கு இடையூறாக அமையும் என்பதனால் அவற்றினை காட்சிப்படுத்துவது நடைமுறை ரீதியாக பொருத்தமற்றதாகும். ஆயினும், பொதுவான அலுவலகப் பயணங்களின் போது அரச சின்னம் மற்றும் சுங்க சின்னம் என்பன தற்காலிகமாக காட்சிப்படுத்தப்படுகிறன.
6	வாகனமொன்று பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டு 8 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதியில் அகற்றப்பட்டிருக்காமை.	01/2020 ஆம் இலக்க, அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நி.ஒ. 770(4) இற்கமைய, பாவனையிலிருந்து அகற்றப்பட வேண்டிய வாகனங்களை அடையாளம் காண்பதற்காக விசேட கணிப்பாய்வு சபையொன்று நியமிக்கப்பட்டு, 04 வாகனங்கள் அகற்றப்பட வேண்டிய வாகனங்காளக அடையாளம் கண்டனர். அதற்கமைய, மதிப்பீட்டு சபைகள் மற்றும் வெளியகற்றல் சபைகள் என்பன ஏற்படுத்தப்பட்டு மேலதிக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
7	ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பிலும் நி.ஒ. இன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை.	விசாரணை அலுவலர்களின் அதிகரித்த வேலைப் பளு காரணமாக உரிய விசாரணை அறிக்கைகளை

		உரிய நேரத்தில் வழங்குவதில் ஏற்பட்ட தாமத்தின் காரணமாக நி.ஒ. (104) இறுதி அறிக்கைகளை குறிப்பிட்ட காலத்திற்குள் பூரணப்படுத்த முடியவில்லை. எதிர்காலத்தில் குறித்த விசாரணைகளை உரிய காலத்திற்குள் நடத்துவதற்கும், தற்போதைய விசாரணைகளை துரிப்படுத்தி அவற்றினைப் பூரணப்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கிறேன்.
8	ஓராண்டுக்கும் மேலாக காணப்படும் நிலுவைக் கடன் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்காமை	2024.05.29 ஆம் திகதிய 01/2024, ஆம் இலக்க, அரச நிதிச் சுற்றறிக்கைப் பிரகாரம், நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
9	நி.ஒ. 371 இன் பிரகாரம் வெளியிடப்பட்ட பணி குறித்த இடைக்கால கட்டு நிதி ஒரு மாதத்திற்குள் செலுத்தித் தீர்க்கப்பட்டிருக்காமை	பணி குறித்த இடைக்கால கட்டு நிதி, பெறப்பட்ட பணி முடிவடைந்ததும், அவற்றினை உடனடியாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அறிவூட்டப்பட்டுள்ளனர்.
10	நி.ஒ.371 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மீறி பணி குறித்த இடைக்கால கட்டு நிதி வழங்கப்பட்டிருந்தமை.	சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் கீழ் பெறப்பட முடியுமான எல்லை மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களில் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் அனுமதியினைப் பெற்று இடைக்கால கட்டு நிதியினை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இரண்டாம் பிரிவு : 73.00		
1	நிறுவனம் தனது விடயப் பரப்பிற்கிணங்க நிலை பெறுதகு நோக்கங்களை இனங் காணப்பட்டிருக்காமை	2023 ஆம் ஆண்டளவில், இலங்கை சுங்கம் 2024-2028 ஆம் ஆண்டுகளை இலக்காகக் கொண்டு, மூலோபாயத் திட்டமொன்றினைத் தயாரித்து, அதனுடன் தொடர்புடைய இலக்குகளை அடைவதற்காக செயற்பட்டு வருகிறது. அந்த முக்கிய இலக்குகளுடன் தொடர்புடைய பின்வரும் நிலையான அபிவிருத்தி இலக்குகள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளன. 1. அரச வருமானத்தினை உரிய முறையில் திரட்டுதல். 2. சர்வதேச வர்த்தகத்திற்கு வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தல். 3. சுங்க சட்டம் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய சட்டங்களை

		அமுல்படுத்தல் மற்றும் மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுத்தல். 4. சமூக, சுற்றாடல் மற்றும் தேசிய மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுத்தல்.
2	அடையாளம் காணப்பட்டுள்ள நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக அடையப் பெற வேண்டிய இலக்குகள் தீர்மானிக்கப்பட்டிருக்காமை	மேலே 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிலையான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் தொடர்புபற்ற நிறுவன முக்கிய இலக்குகள் என்பனவற்றினை நெருங்குவதற்காக அடையாளம் காணப்பட்ட நோக்கங்கள், மூலோபாயங்கள் மற்றும் செயற்பாடுகள் என்பன உப தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தி ஒதுக்கப்பட்டுள்ளன. குறித்த நோக்கங்களின் அடிப்படையில், இலக்குகளை அடைவதற்கான செயற்பாட்டுத் திட்டங்கள் மற்றும் செயலாற்றுகைத் திட்டங்கள் என்பனவற்றினைத் தயாரிப்பதற்காக, திணைக்களத்தின் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதோடு, குறித்த செயலாற்றுகைகளை அரையாண்டு மற்றும் வருடாந்த மதிப்பீடுகளுக்கு உட்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
3	அடையாங் காணப்பட்டுள்ள நிலையான அபிவிருத்தி நோக்குகளை செயற்படுத்துவதன் மூலம் முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்வதற்கான குறிகாட்டிகள் அமைக்கப்பட்டிருக்காமை	நிறுவனத்தின் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதுடன் தொடர்புபற்ற முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
4	2018.01.24 ஆம் திகதிய 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் திருத்தியமைக்கப்பட்ட 2008.06.02 ஆம் திகதிய 05/2008 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கைக்கு அமைய பிரசைகள்/ சேவை பெறுநர் பட்டயம் முறையாகத் தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப் பட்டிருக்காமை.	சுங்கத்தின் பணிகள் சர்வதேச வர்த்தகத்துடன் நேரடியாக தொடர்புபற்றுள்ளதோடு அவற்றினை சர்வதேச சமவாயங்கள் மற்றும் சர்வதேச ஒப்பந்தங்களுக்கமைய மேற்கொள்ளல் வேண்டும். கியோட்டோ சமவாயம் மற்றும் உலக வர்த்தக அமைப்புடன் கையெழுத்திட்டுள்ள வர்த்தக வசதி ஒப்பந்தம் (WTO-TFA) என்பன இதற்கு சில உதாரணங்களாகும். அதற்கமைய, சேவை வழங்கல் தொடர்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள சமவாயங்கள்

		எப்போதும் சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் சமவாயங்கலின் விதிமுறைகளுடன் இணைந்து செல்லும் வகையில் அமைந்திருத்தல் வேண்டும். இலங்கை சுங்கம், சுங்க செயல்பாடுகள் தொடர்பில் சேவை பெறுநர்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட பயநர் பட்டயத்தினை (SOP) தற்போது அடையாளம் கண்டுள்ளதுடன், அவற்றில் சில வெளியிடப்பட்டும் உள்ளன. மேலும், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை விடுவிக்க எடுக்கும் காலம் குறித்து ஆய்வொன்றினை எதிர்காலத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன் மூலம் அதனை பொது மக்கள் திணைக்கள இணையதளத்தை அணுகுவதன் மூலம் அறிந்து கொள்வதற்காக சேவை பெறுநர்கள் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
5	தயாரிக்கப்பட்ட மனித வள மேம்பாட்டுத் திட்டத்தில், 50% இற்கு மேற்பட்ட ஊழியர்களுக்கு ஆண்டுக்கு குறைந்தபட்சம் 12 மணி நேரத்திற்கு குறையாமல் பயிற்சி வாய்ப்பினை வழங்குவது உறுதிசெய்யப் பட்டிருக்காமை.	சுங்கத் திணைக்களத்தின் ஆரம்ப நிலை பணியாளர்கள் முதல் சிரேஷ்ட நிலை வரையில் பரந்துள்ள பதவிகளுக்காக 12 மணி நேரத்திற்கு மேலான திறன் அபிவிருத்திப் பயிற்சித் திட்டங்கள் மற்றும் விசேட துறைகளை உள்ளடக்கிய உள்ளூர் பயிற்சித் திட்டங்கள் என்பன இத் திணைக்களத்தின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய இற்றை வரையில் நடாத்தப்பட்டு வருகின்றன. இதற்கு மேலதிகமாக, சிரேஷ்ட நிர்வாகப் பதவிகளை வகிக்கும் மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகங்களுக்கும் விசேட துறைகளின் கீழ் ஏற்பாடு செய்யப்படுகின்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாநாடுகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளில் பங்கேற்கின்றனர். மேலும்,மேலதிகப் பணிப்பதளர் நாயகங்களுக்காக முகாமைத்துவம் தொடர்பிலான உள்நாட்டுப் பயிற்சித் திட்டங்கள் வருடாந்த செயலாற்றுகைத் திட்டத்தில் உள்ளடக்கி எதிர்காலத்தில் அவற்றை ஏற்பாடுசெய்வதற்குத்

		தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
6	ஒட்டுமொத்த பணியாட்டொகுதியும் உள்ளடங்கதக்கதாக செயலாற்றுகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப் பட்டிருக்காமை	அனைத்து அலுவலர்களினதும் செயலாற்றுகை மதிப்பீடு செய்யப்படுவதோடு, எதிர் காலத்தில் தேவையான அறிவுறுத்தல்களை வழங்கி, 02/2018 ஆம் இலக்க, பொது நிருவாக சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.
7	நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியான / ஒப்புதலளிக்க மறுக்கின்ற /பாதகமான மட்டத்தில் நிலவியமை.	2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை சுங்கத்தின் நிதி நிலமை அறிக்கை தொடர்பில் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, கணக்காய்வுச் சட்டத்தின் 11/(1) ஆம் பிரிவிற்கமைய, கணக்காய்வாளர் நாயகத்தின் சுருக்க அறிக்கையில் முனைப்பழிவு செய்யப்பட்டுள்ள அபிப்பிராயங்களை அடிப்படையாகக் கொண்டு, விடயங்களை சரி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறன.
8	அனைத்து உத்தியோகத்தர்களும் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குறித்த அறிக்கைகளை சமர்ப்பித்திருக்காமை	முறையாக அறிவுறுத்தல்களை வழங்கி, சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்களிடமிருந்தும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. *79* இற்காக இலங்கை சுங்கம் தொடர்பாக நிலையியல் கட்டளை இலக்கம் *119(4)* இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை மேற்குறிப்பிட்டவாறு தயவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்
சுங்கப் பணிப்பாளர் நாயகம்
இலங்கை சுங்கம்

திணைக்களத்தின் பெயர் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. : 79

நிலையியல் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்.

முதற் பகுதி : 92.00.

தொடர் இல	அறிக்கையில் குறிப்பிடப்பட்ட சபையினால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை நிவர்த்திப்பதற்காக நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
01.	2017.06.26 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் பத்தி 7 இன் படி, 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் அகற்றப்பட்ட சொத்துக்கள் பற்றிய தகவல்கள், கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	2018 ஆம் ஆண்டு கொள்வனவுகள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளன.
02.	2017.06.26 ஆந் திகதிய 1/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் பத்தி 13 இன் படி, சுற்றறிக்கையின் விதிகளை நடைமுறைப்படுத்துவதை ஒருங்கிணைக்க ஒரு பொருத்தமான அதிகாரியை நியமித்து கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்திற்கு அறிவிக்கப்படாமை.	01/2017 ஆந் திகதிய சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் பத்தி 13 இன் படி, கணக்காளர் எஸ்.ஏ.ஆர்.சம்பத் மாயா, சுற்றறிக்கை விதிகளை அமுல்படுத்துவதற்கான ஒருங்கிணைப்பு அதிகாரியாக நியமித்து, கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்திற்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
03.	வருடாந்த பொருட் பட்டியல் கணக்கெடுப்பில் வெளிப்படுத்தப்பட்ட அதிகப்படியான, குறைபாடுகள் தொடர்பான பரிந்துரைகள் மற்றும் ஏனைய பரிந்துரைகள் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் செயற்படுத்தப்படாமை.	உபரிகள் பொருட்பட்டியற்படுத்தப்படாத போதும், குறைபாடுகளுக்கு, நி.ஒ.வி104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, நியமிக்கப்பட்ட குழு இது தொடர்பான தகவல்களை ஆராய்ந்து அறிக்கைகளைப் பெறுவதற்கு சிறிது கால அவகாசம் எடுத்தது. இதன்படி, விசாரணை தொடர்பான ஆரம்ப அறிக்கையை குழு வழங்கியுள்ளதுடன், அதற்கமைய உரிய பதிவழிப்புகளும் மேலதிக விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
04.	அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினைகள் வரையப்பட்டிருக்காமை	வாகனங்களில் அரச இலச்சினைகளை வர்ணம் பூசுவதற்கு கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான தகவல்கள் கணக்கு பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

05.	ஒரு வாகனம் பாவனைக்குதவாதது என தெரிவிக்கப்பட்டிருந்தும் 08 மாதங்களுக்கும் மேலாக அகற்றப்பட்டிருக்காமை	GD-5581 மற்றும் GD-5584 என்ற இலக்கங்களைக் கொண்ட வாகனங்களின் பதிவு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திலிருந்து பதிவு இரத்து செய்யப்பட்டு, பயிற்சி நோக்கங்களுக்காக தொழிற்பயிற்சி அதிகார சபைக்கு மாற்றப்பட்டுள்ளது. PB – 8063 என்ற இலக்கத்தையுடைய வாகனம் தொடர்பில், மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திடமிருந்து பதிவு இரத்து செய்யப்பட்டு, இதுவரை கிடைக்கப்பெறவில்லை. PC – 2421 என்ற இலக்கத்தையுடைய வாகனம் தொடர்பாக நியமிக்கப்பட்ட 104(4) குழு அறிக்கை நிதியமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்த அறிக்கையின் மூலம் வழங்கப்படும் பரிந்துரைகளின் படி மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
06.	ஒரு வருடத்திற்கும் மேலாக இருந்துவரும் கடன் நிலுவைகளின் இருப்பு	கடன் நிலுவையைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை தொடர்பான விவரங்கள் இணைப்பு 01ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன.
07.	திணைக்களத்திற்கு கிடைத்த வெளிநாட்டு உதவிகள் தொடர்பில் 1994.04.20 ஆந் திகதிய பொதுக் கணக்குச் சுற்றறிக்கை இலக்கம் 30/94 இன் ஏற்பாடுகளின்படி தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியமை.	• 19, 20 மற்றும் 21வது சர்வதேச தொழில் புள்ளிவிபரவியலாளர்களின் மாநாடுகளில் எடுக்கப்பட்ட முடிவுகளை நடைமுறைப்படுத்த, 2024ல் மேற்கொள்ளப்படவுள்ள முன்னோடி ஆய்வின் செலவுகளை ஈடுகட்ட இந்த ஏற்பாடுகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த பணிகளைத் திட்டமிடுவதில் தொடர்புடைய கேள்விக்கொத்துகள் உள்ளிட்ட அட்டவணைகளை தயாரிப்பதில் சர்வதேச நிபுணர்களின் உதவி தொலைநிலை இணையவழி முறையின் மூலம் மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை தயாரிக்கும் போது தேவையான சாதனங்களை கொள்வனவுசெய்வதற்கும், அந்த வசதிகளை திணைக்களத்தில் ஏற்படுத்தவும் இந்த ஏற்பாடுகளின் ஒரு பகுதியைப் பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. அதற்குத் தேவையான அனுமதியைப் பெறுவதற்கு ஏற்கனவே அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. முன்னோடி கணக்கெடுப்பு முடிவுகளின் அடிப்படையில், தொடர்புடைய அட்டவணையை இற்றைப்படுத்தி, அந்த கணக்கெடுப்பை எதிர்வரும் ஆண்டுகளில் மேற்கொள்வதற்கும் அந்த நிதியை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. • 2019 ஆம் ஆண்டில், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் வேண்டுகோளின்படி, UNICEF உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட சிறுவர் இல்லங்களில் உள்ள சிறுவர்கள் தொடர்பான கணக்கெடுப்புக்கு பணம் செலுத்துவதற்கான அங்கீகாரம் கிடைப்பதற்கு தாமதமானமையினால், அந்த வெளிநாட்டு உதவி எனவே பொது வைப்பு கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டது. இந்தக் கொடுப்பனவுகளுக்கு தற்போது அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளமையால், கொடுப்பனவுகளை செய்ய சமர்ப்பிக்கப்பட்டுவருகின்றன.

08.	வெளிநாட்டு உதவியாக கிடைக்கப்பெற்ற அனைத்து நிதியும் திறைசேரி பிரதிச் செயலாளரின் வங்கிக் கணக்கிற்கு அனுப்பப்படவில்லை.	• கடந்த சில வருடங்களாக இந்த நடவடிக்கையினை மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்ட போதிலும், கோவிட்-19 தொற்று நிலைமை மற்றும் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக, திட்டமிட்டபடி செயற்பாடுகளை முன்னெடுக்க முடியவில்லை. அதன்படி, 2024-ஆம் ஆண்டில், அந்த நிதியைப் பயன்படுத்தி மேற்கண்ட பணிகளைச் செய்ய இந்தப் பணத்தைத் தக்க வைத்துக் கொள்வது அவசியம் என்பதைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. *79.*

நிறுவனத்தின் பெயர் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

இரண்டாவது பகுதி : 71.00.

தொடர் இல	அறிக்கையில் குறிப்பிடப்பட்ட சபையினால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை நிவர்த்திப்பதற்காக நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
01.	நிறுவனம் அதன் விடயத்துறைக்கு ஏற்ப பேண்தகு இலக்குகளை அடையாளம் கண்டிருக்கவில்லை.	தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான செயல்பாட்டில் குறிக்கோள் இல. 17 இன் கீழ் 17.18 இலக்கினை அடைவதற்கான பொறுப்பைக் கொண்டுள்ளது. அதன் கீழ் உள்ள 17.18.2 மற்றும் 17.18.3 குறிகாட்டிகளை திணைக்களம் அடையாளம் கண்டுள்ளது. இதன்படி, பேண்தகு அபிவிருத்தி இலக்கு 17.18. ஐ அடைவதற்கு தேவையான நடவடிக்கைகளை திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது இதற்கு மேலதிகமாக, பேண்தகு அபிவிருத்தி குறிக்கோள்களை அடைவதற்கான செயல்பாட்டில், தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள முதன்மைப் பணி, திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் தொகை மதிப்பு மற்றும் கணக்கெடுப்புகள் அடிப்படையிலான பேண்தகு அபிவிருத்தி குறிக்கோள்களை அடைவதற்குத் தேவையான சுட்டிகளைத் தொகுத்து வழங்குவதாகும். இதன்படி, 35 பேண்தகு அபிவிருத்தி குறிக்கோள் சுட்டிகளுக்கான தரவுகளை தொகுக்கும் பொறுப்பு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அவற்றில், வருடாந்தம் செயன்முறைப்படுத்தப்படும் 12 சுட்டிகள் 2022 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டுள்ளன. 2022 ஆம் ஆண்டு தொடர்பாக, திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையின் அத்தியாயம் 5 தொடர்பான மேற்கூறிய விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை என்ற போதிலும், அந்த விடயங்களை 2023 செயலாற்றுகை அறிக்கையில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
02.	அடையாளம் காணப்பட்ட பேண்தகு குறிக்கோள்களை அடைய, இலக்குகள் தீர்மானிக்கப்படவில்லை.	
03.	அடையாளம் காணப்பட்ட பேண்தகு இலக்குகளை நடைமுறைப்படுத்துவதில் முன்னேற்றத்தை அளவிட குறிகாட்டிகள் அமைக்கப்பட்டிருக்கவில்லை.	

04.	2018.01.24 ஆந் திகதிய 05/2018(I) ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட 2008.02.06 ஆந் திகதிய சுற்றறிக்கையின்படி, பிரஜைகள்/ வாடிக்கையாளர் சாசனம் உரிய முறையில் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவில்லை.	பிரஜைகள்/ வாடிக்கையாளர் சாசனம் தயாரிக்கப்பட்டுள்ளது
05.	நிறுவனத்தின் பிரஜைகள்/ வாடிக்கையாளர் சாசனம் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணித்து மதிப்பிடுவதற்கான முறைமையொன்று நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டிருக்காமை.	நிறுவனத்தின் பிரஜைகள்/ வாடிக்கையாளர் சாசனம் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணித்து மதிப்பிடுவதற்கான முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.
06.	2018 ஜனவரி 24 ஆந் திகதிய 02/2018ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி முறையாக தயாரிக்கப்பட்ட மனித வளத் திட்டத்தைத் தயாரிக்கத் தவறியமை.	2022 ஆம் ஆண்டிற்கான மனித வளத் திட்டத்தைத் தயாரித்தி நிறைவுசெய்ய முடியவில்லை. அதற்குக் காரணமாக 2022ஆம் ஆண்டு இலங்கையில் நிலவிய சூழ்நிலை காரணமாக பொ.நி.சுற்றறிக்கைகள் 10/2022, 14/2022, 15/2022 மற்றும் 16/2022 தொடர்பில் உங்களது கவனத்தை ஈர்க்கிறேன். மேலும், 2022.04.26 முதல் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 குறித்தும் நான் கவனத்தை ஈர்க்கிறேன். • 15/2022 - அரசு அலுவலகங்களுக்கு அதிகாரிகளை அழைப்பது மட்டுப்படுத்தப்பட்டது. • 10/2022 - வளங்கள் இல்லாததால் செலவுகளைக் குறைக்க, பொது நிறுவனங்களின் ஊழியர்களை சேவைக்கு வரவழைப்பது குறைவாக இருந்தது. • 04/2022 - பொதுச் செலவினங்களை முகாமைத்துவம் செய்வதற்கு மின்சாரம் மற்றும் எரிபொருள் சிக்கனமாகப் பயன்படுத்தப்பட்டது. • 14/2022 - உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விடுமுறைகளை எடுக்க அரசு அதிகாரிகள் ஊக்குவிக்கப்பட்டனர் • 03/2022 ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின்படி அரசாங்க செலவுகள் மட்டுப்படுத்தப்பட்டன. 2023 ஆம் ஆண்டுக்குள், சம்பந்தப்பட்ட திட்டத்தின்படி பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. எனவே, 2024 ஆம் ஆண்டில், 2024.01.10 ஆந் திகதிய 01/2024 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை பொதுச் செலவினக் கட்டுப்பாட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 05, உள்நாட்டு பயிற்சித் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படியும் அரச உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்யாமை தொடர்பிலும், மனித வளத் திட்டத்தை தயாரிப்பதில் சிக்கல் உள்ளது என்பதை தெரிவிக்கிறேன். 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டிற்கான தொடர்புடைய திட்டம் இணைப்பு 02 இல் வழங்கப்பட்டுள்ளது.

07.	தயாரிக்கப்பட்ட மனிதவளத் திட்டத்தின் மூலம் 50 சதவீதத்திற்கும் அதிகமான ஊழியர்களுக்கு வருடத்திற்கு குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி வாய்ப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்காமை.	2022 ஆம் ஆண்டிற்கு. 2401 செலவுத் தலைப்பின் கீழ் ஊழியர் பயிற்சிக்கு ரூ. 4.5 மில்லியன் கோரப்பட்ட போதும், ஆண்டின் தொடக்கத்தில் ரூ. 0.232 மட்டுமே கிடைக்கப்பெற்றது. 2022.10.04ஆந் திகதி மீண்டும் ரூ. 0.1 கிடைக்கப்பெற்றது. அதன்படி, ரூ. 0.332 மில்லியன் செலவில் அனைத்து ஊழியர்களுக்கும் 12 மணிநேரத்திற்கு குறையாத பயிற்சி வாய்ப்பினை அளிக்க முடியாது. மேலும் • 15/2022 - அரசு அலுவலகங்களுக்கு அதிகாரிகளை அழைப்பது மட்டுப்படுத்தப்பட்டது. • 10/2022 - வளங்கள் இல்லாததால் செலவுகளைக் குறைக்க, பொது நிறுவனங்களின் ஊழியர்களை சேவைக்கு வரவழைப்பது குறைவாக இருந்தது. • 04/2022 - பொதுச் செலவினங்களை முகாமைத்துவம் செய்வதற்கு மின்சாரம் மற்றும் எரிபொருள் சிக்கனமாகப் பயன்படுத்தப்பட்டது. • 14/2022 - உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விடுமுறைகளை எடுக்க அரசு அதிகாரிகள் ஊக்குவிக்கப்பட்டனர் • 03/2022 ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின்படி அரசாங்க செலவுகள் மட்டுப்படுத்தப்பட்டன. மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி உரிய இலக்குகளை அடைய முடியவில்லை என்பதை குறிப்பிட விரும்புகின்றேன். மேலும், இணைப்பு 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சி நிகழ்ச்சிகள் 2022 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டதை நான் மேலும் சுட்டிக்காட்டுகிறேன். 2023 ஆம் ஆண்டுக்கான பயிற்சித் திட்டங்கள் 100% நிறைவடைந்துள்ளதுடன், 2024ஆம் ஆண்டுக்கான பயிற்சித் திட்டங்கள் தொடர்ந்தும் நடத்தப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.
08.	அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கி செயலாற்றுகை ஒப்பந்தங்களை தயாரித்து ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்காமை.	செயலாற்றுகை ஒப்பந்தங்கள் தயாரிக்கப்படவில்லை. பொது நிர்வாக சுற்றறிக்கை 02/2018 (I) இன் படி, 2023 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்களில் கைச்சாத்திட வேண்டிய அவசியமில்லை.

09.	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50% க்கும் குறைவாக இருந்தமை	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50% க்கும் குறைவாக இருந்தமை பற்றி குறிப்பிடுகிறேன். அதற்கான காரணம் பின்வருமாறு • 15/2022 - அரசு அலுவலகங்களுக்கு அதிகாரிகளை அழைப்பது மட்டுப்படுத்தப்பட்டது. • 10/2022 - வளங்கள் இல்லாததால் செலவுகளைக் குறைக்க, பொது நிறுவனங்களின் ஊழியர்களை சேவைக்கு வரவழைப்பது குறைவாக இருந்தது. • 04/2022 - பொதுச் செலவினங்களை முகாமைத்துவம் செய்வதற்கு மின்சாரம் மற்றும் எரிபொருள் சிக்கனமாகப் பயன்படுத்தப்பட்டது. • 14/2022 - உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விடுமுறைகளை எடுக்க அரசு அதிகாரிகள் ஊக்குவிக்கப்பட்டனர் • 03/2022 ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின்படி அரசாங்க செலவுகள் மட்டுப்படுத்தப்பட்டன. மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி திணைக்களம் செயற்பட்டதால் எஞ்சிய பயிற்சித் திட்டங்களை முன்னெடுக்க முடியவில்லை என்பதை குறிப்பிட விரும்புகின்றேன். மேலும், இணைப்பு 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சி நிகழ்ச்சிகள் 2022 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டுள்ளது என்பதை நான் மேலும் சுட்டிக்காட்டுகிறேன். 2023ஆம் ஆண்டுக்கான பயிற்சித் திட்டங்கள் 100% நிறைவடைந்துள்ளது என்பதையும், 2024ஆம் ஆண்டுக்கான பயிற்சித் திட்டங்கள் தற்போது நடத்தப்பட்டு வருவதையும் மேலும் குறிப்பிடுகின்றேன்.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. 79 இற்காக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தொடர்பாக நிலையியல் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை மேற்குறிப்பிட்டவாறு தயவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்
பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

இணைப்பு 01

குறைபாடுகளை நிவர்த்திப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை

அடையாளம் காண	தற்போதைய நிலை					
ஒரு வருடத்திற்கும் மேலாக இருந்துவரும் கடன் நிலுவைகளின் இருப்பு		பெயர் மற்றும் பதவி	வரையான மீதி ரூ.	கடன் அறவீடு ரூ.	2024.07/31 அன்று மீதி ரூ.	கடன் அறவிடுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள் நடவடிக்கை
	(அ.) அ) காலம்சென்ற உத்தியோகத்தர்கள் ரூ.571,239.00	1. கே. விக்னேஷ்வரன் (குறியீட்டு எழுதுனர்)	92,750.00	-	92,750.00	இந்த உத்தியோகத்தரின் நிலுவைத் தொகை, இறப்பு பணிக்கொடையிலிருந்து மீட்டெடுப்பதற்காக ஓய்வூதிய முகாமைத்துவ முறைமைக்கு அனுப்பப்பட்டுள்ளது.
		2. ஏ.பீ. சிங்கக்குட்டி ஆரச்சி (த. தொ.தொ.உ)	236,160.00	-	236,160.00	இந்த உத்தியோகத்தரின் நிலுவைத் தொகை, இறப்பு பணிக்கொடையிலிருந்து மீட்டெடுப்பதற்காக ஓய்வூதிய முகாமைத்துவ முறைமைக்கு அனுப்பப்பட்டுள்ளது.
		3. ஈ.எஸ்.சீ. தயாரத்ன (புள்ளிவிபர உத்தியோகத்தர்)	65,900.00	65,900.00	-	2022 ஒக்டோபர் மாதம் தீர்க்கப்பட்டுள்ளது.
		4. டபிள்யு.ஏ.எஸ்.ஆர். ஜயலால் (ஜயலால்)	176,429.00	-	176,429.00	இந்த உத்தியோகத்தரின் நிலுவைத் தொகை, இறப்பு பணிக்கொடையிலிருந்து மீட்டெடுப்பதற்காக ஓய்வூதிய முகாமைத்துவ முறைமைக்கு அனுப்பப்பட்டுள்ளது.
	மொத்தம்		**571,239.00**	**65,900.00**	**505,339.00**	
	ஆ. பதவி வரிதான உத்தியோகத்தர் ரூ. 634,661.00	1. டபிள்யு.எம். ஜே. வீரகோன் (புள்ளிவிபர உத்தியோகத்தர்)	27,080.00	-	27,080.00	அரசாங்க நிதிச் சுற்றறிக்கை 01/2024 இன் படி, கடன் நிலுவைகளைக் பதிவழிப்பது தொடர்பான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையைத் தயாரித்து சமர்பிக்க திணைக்கள குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஒரு வருடத்திற்கும் மேலாக இருந்துவரும் கடன் நிலுவைகளின்	ஆ. ஆ) பதவி வரிதான உத்தியோகத்தர்கள் ரூ.634,661.00	2. ஏ.ஜீ.எம்.எஸ். குமார (புள்ளிவிபர உத்தியோகத்தர்)	38,410.00	-	38,410.00	அரசாங்க நிதிச் சுற்றறிக்கை 01/2024 இன் படி, கடன் நிலுவைகளைக் பதிவழிப்பது தொடர்பான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையைத் தயாரித்து சமர்பிக்க திணைக்கள குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.
		3. டபிள்யு.ஏ. ஜே.எஸ்.குமார (குறியீட்டு எழுதுனர்)	47,150.00	-	47,150.00	அரசாங்க நிதிச் சுற்றறிக்கை 01/2024 இன் படி, கடன் நிலுவைகளைக் பதிவழிப்பது தொடர்பான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையைத் தயாரித்து சமர்பிக்க திணைக்கள குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.
		4. கே.எம்.டீ.ஆர். பிரியதர்ஷினி (குறியீட்டு எழுதுனர்)	78,200.00	-	78,200.00	இந்த உத்தியோகத்தரின் வதிவிடம் குறித்த விபரங்களை கண்டறிய முடியவில் லை என்பதோடு, வெளிநாடு சென்றுள்ளாரா என்பதைக் கண்டறியுமாறு அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பாக 2024.02.22 திகதியிட்ட நினைவூட்டல் கடிதமும் குடிவரவுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.
		5. எம்.ஜீ.டீ. கே.பிரியகெலும் (அ.ஊ.சே.))	104,250.00	-	104,250.00	நிதி ஒழுங்குவிதி 109 இன் கீழ் கடன் மீதியை பதிவழிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது.
		6. எம்.எஸ்.எம். சப்ராஸ் (அ.ஊ.சே.)	59,784.00	-	59,784.00	வழக்கு தாக்கல் செய்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், தற்போதைய நிலைமை குறித்து 2024.05.16 ஆந் திகதியிட்ட கடிதம் மூலம் வினவப்பட்டுள்ளது.
		7. எம்.பீ.ஆர். ஜே. பண்டார (புள்ளிவிபர உத்தியோகத்தர்)	95,140.00	-	95,140.00	இந்த உத்தியோகத்தரின் கடன் மீதியை மீளப்பெறுவது தொடர்பாக கொழும்பு மாவட்ட நீதிமன்றில் வழக்கு இலக்கமான DMR/2724/2020 இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, மேலதிக விசாரணை 2024.03.20 அன்று இடம்பெற்றதுடன், உத்தியோகத்தர் ஆஜராகாத காரணத்தினால், வழக்கு 2024.12 அன்று மீண்டும் அழைக்கப்படவுள்ளது.

		8. டீ.என். பிடிகல (த.தொ.தொ.உ)	107,200.00	-	107,200.00	இந்த உத்தியோகத்தரின் வதிவிடம் குறித்த விபரங்களை கண்டறிய முடியவில் லை என்பதோடு, 2023.12.08 ஆந் திகதியிட்ட கடிதத்தில், மேற்படி உத்தியோகத்தரின் வசிப்பிடம் குறித்து அவரது குடும்ப உறவினர்களிடம் விசாரித்து அறிவிக்குமாறு பிரதேச செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.
		9. ஆர். பீ. எஸ். கே. செனவிரத்ன (புள்ளிவிபர உத்தியோகத்தர்)	3,200.00	3,200.00	-	2023 செப்டெம்பர் மாதம் கடன் மீதி தீர்க்கப்பட்டுள்ளது.
		10. ஜீ.என். பெரேரா (புள்ளிவிபரவியலாளர்)	23,320.00	23,320.00	-	2023 ஜூன் மாதம் கணக்குப் புத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்பட்டுள்ளது.
		11. எம்.ஏ.டீ.ஜீ. பெரேரா (அ.ஊ.சே.)	27,305.00	27,305.00	-	2022டிசம்பர் மாதம் கணக்குப் புத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்பட்டுள்ளது.
		12. ஆர். பீ. எல். சுசன்த (அ.ஊ.சே.)	17,050.00	17,050.00	-	2023 ஒக்டோபர் மாதம் கணக்குப் புத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்பட்டுள்ளது.
		13. டீ. எச். சரத் (அ.ஊ.சே.)	6,572.00	6,572.00		2022 நவம்பர் மாதம் கடன் மீதி தீர்க்கப்பட்டுள்ளது.
	மொத்தம்		**634,661.00**	**77,447.00**	**557,214.00**	
	இ. ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் ரூ. 82,790.00	1. எச்.ஏ. ஆர். எஸ்.கே. ஜயசேக்கர (அ.ஊ.சே.)	82,790.00	82,790.00	-	2022 ஆகஸ்ட் மாதம் கடன் மீதி தீர்க்கப்பட்டுள்ளது.
	மொத்தம்		**82,790.00**	**82,790.00**	**-**	

Annex 02

2023 - 2024 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பயிற்சி அட்டவணை

0

தொ. இல	பயிற்சி திட்டங்கள்:	2023																																													
		ஜனவரி				பெப்ரவரி				மார்ச்				ஏப்ரல்				மே				ஜூன்				ஜூலை				ஆகஸ்ட்				செப்டெம்பர்				ஒக்டோபர்				நவம்பர்				டிசம்பர்			
		1	2	3	4	1	2	3	4	1	2	3	4	1	2	3	4	1	2	3	4	1	2	3	4	1	2	3	4	1	2	3	4	1	2	3	4	1	2	3	4	1	2	3	4	1	2	3	4
1	உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள்/ குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு - " கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் அனுபவங்கள் மற்றும் சவால்கள்" (இணையவழி)																																																
2	உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு - "தமிழ் மொழிமூல நிகழ்ச்சித் திட்டம் - தொழிற்படை கணக்கெடுப்பு பேண்தகு அபிவிருத்தி குறிகாட்டிகள்" (இணையவழி)																																																
3	உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள்/ குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு - 'சவால்களுக்கு மத்தியில் அடுத்துவரும் தசாப்தத்திற்கான																																																

	தரவுசேகரிப்பு' (இணையவழி)
4	உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள்/ குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு - 'அனர்த்தங்கள் மற்றும் காலநிலை மாற்றங்களினால் அபிவிருத்தி செயன்முறைக்கு ஏற்படும் தாக்கங்களை மதிப்பிடுவதில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணி' (இணையவழி)
5	உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு - 'மாவட்ட புள்ளிவிபர பிரிவொன்றினால் அடையப்பெற்ற வெற்றி - குருணாகல்'
6	தொற்றா நோய்கள் - வைத்தியர் லலித் ஏகநாயக்க - லங்கா வைத்தியசாலை
7	கள ஆய்வுப் பயணம். பொருளியல் கற்கைகள் பிரிவு - ருஹுணு பல்கலைக்கழகம்
8	தலைமைத்துவம். ஆக்கத்திறன் மற்றும் அதிகபட்ச

	செயலாற்றுகை பற்றிய உரை
9	கள ஆய்வுப் பயணம். கணித கற்கைகள் பிரிவு - ருஹுணு பல்கலைக்கழகம்
10	உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு - "தமிழ் மொழிமூல நிகழ்ச்சித் திட்டம் - சனத்தொகை கணக்கெடுப்பு வரலாறும் 15ஆவது சனத்தொகை கணக்கெடுப்பும்"
11	உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு - "*Crypto curency and Blockchain*' பற்றிய அறிமுகம்
12	உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -" நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படை வருடத்தை இற்றைப்படுத்தல்'
13	உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு - "MRCB 2022' பற்றிய அறிமுகம் இரண்டாவது பகுதி'

14	உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு - "தமிழ் மொழிமூல நிகழ்ச்சித் திட்டம் - இலங்கையில் வறுமை"
15	உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு - "MRCB 2022' பற்றிய அறிமுகம்
16	மாவட்ட புள்ளிவிபர பிரிவு உத்தியோகத்தர்களுக்கான Excel மற்றும் wordபயிற்சி (சிங்களம்)
17	மாவட்ட புள்ளிவிபர பிரிவு உத்தியோகத்தர்களுக்கான Excel மற்றும் wordபயிற்சி (தமிழ்)
18	புதிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி
19	SPSS மென்பொருள் பற்றிய ஆரம்ப பயிற்சி
20	தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமானங்கள்
21	உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -"DHS - கணக்கெடுப்பு பற்றிய அறிமுகம்
22	உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு - "அலுவலக

	முறைமை பற்றிய அறிமுகம்
23	உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள்/ குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு - "Mobile photography" பற்றிய அறிமுகம்
24	STATA கணினி மென்பொருளைப் பயன்படுத்தி தரவு செம்மையாக்கல் மற்றும் முன்வைத்தல் முறைமை பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
25	திணைக்கள பணிகள் குறித்த விழிப்புணர்வு - மகரகம தேசிய கல்வி நிறுவகம்
26	தமிழ் 200 மணித்தியால கற்கை நெறி (இணையவழி)
27	தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமானங்கள்
28	வாகன பராமரிப்பு சம்பந்தமாக விழிப்பூட்டுவதற்கான பயிற்சி நிகழ்ச்சி
29	வாகன பராமரிப்பு சம்பந்தமாக விழிப்பூட்டுவதற்கான பயிற்சி நிகழ்ச்சி
30	CS PRO பயிற்சி நிகழ்ச்சி
31	யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு - திணைக்கள பணிகள் குறித்து விளக்கமளித்தல்

32	*Qgis* பற்றிய பயிற்சி நிகழ்ச்சி
33	*R* பற்றிய பயிற்சி நிகழ்ச்சி
34	*Small Area Estimation* பற்றிய பயிற்சி நிகழ்ச்சி
35	தொகைமதிப்பு. புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள புதிய முகாமைத்துவ சேவை (III) உத்தியோகத்தர்களுக்கான ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சி
36	*Data Management and Integrity Unit (DMIU)* நிறுவுதல் மற்றும் *NADA* முறைமையை இற்றைப்படுத்தல் பற்றிய பயிற்சி
37	இலங்கை கடற்படை உத்தியோகத்தர்களுக்கான விசேட செயலமர்வு - 2023 (திணைக்களத்தின் பணிகள் குறித்து விளக்கமளித்தல்)
38	சாரதிகளுக்கான விஞ்ஞானபூர்வமான . சிக்கனமான மற்றும் பாதுகாப்பான முறையில்

	வாகனங்களை செலுத்தல்
39	*Development of Digital Library Collection*
40	*'Python and Machine Learning - 2023'* தொடர்பில் இரண்டு நாள் செயலமர்வு

Annex 03

பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பெயர்	பயிலுனர்களின் மொத்த எண்ணிக்கை	ஆரம்ப திகதி	முடிவுத் திகதி	பயிற்சி திட்டத்தின் வகை (இணையம்/ நேரடி)
SPSS (அடிப்படை)				நேரடி
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -" மொத்த தேசிய உற்பத்தியும் விவசாயத் துறையும்"	36	2022.01.24		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -"உணவு ஐந்தொகை"	28	2022.01.31		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -"உற்பத்தி கைத்தொழில் துறையின் தற்கால மாற்றங்கள்"	59	2022.02.07		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -" பொருளாதாரத்திற்கு வர்த்தகம் மற்றும் சேவைத் துறையின் பங்களிப்பு"	72	2022.02.14		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -"வழங்கல் மற்றும் பயன்பாட்டு அட்டவணை	59	2022.02.21		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -" பொருளாதார வளர்ச்சி வேகத்துடன் தொடர்புடைய எண்ணக்கரு"	43	2022.02.28		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -"உற்பத்தி விலைச் சுட்டி"	38	2022.03.07		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -"பல்வேறு கணக்கெடுப்புகள் தேசிய கணக்குகளுக்கு பயன்படுத்தப்படும் விதம்"	42	2022.03.14		இணையம் :
Basic Excel	25	2022.03.28	2022.03.31	நேரடி
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -"கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டியும் பணவீக்கமும் "	60	2022.03.21		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு " இலங்கையில் தொழிற்படையும் வேலைவாய்ப்பின்மையும் புதிய போக்குகள்"	65	2022.04.25		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு - கடவுச் சீட்டு விண்ணப்பதாரிகள் குறித்த கணக்கெடுப்புன் காண்புகள்"	35	2022.05.09		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -"எமது பொருளாதாரத்திற்கு என்ன நடந்தது"	73	2022.05.23		இணையம் :

புதிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான திணைக்கள விடயத்துறைகள் பற்றி அறிவூட்டும் மூன்று நாள் பயிற்சி	54	2022.05.04	2022.05.	இணையம் :
Indesign மென்பொருள் பற்றிய பயிற்சி	31	2022.05.05	2022.05.23	நேரடி
Basic Excel	11	2022.05.26	2022.05.27	நேரடி
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -"தேசிய நுகர்வோர் விலைச் சுட்டியும் பணவீக்கமும்"	55	2022.05.30		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு - "பணவீக்கம், பணவீக்கத்திற்கான காரணங்கள் மற்றும் அதன் பொருளாதார விளைவுகள்"	49	2022.06.13		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு - "இலாப நோக்கற்ற நிறுவனங்களிடமிருந்து தகவல்களைச் சேகரித்தல் மற்றும் அந்த நிறுவனங்களுக்கான மதிப்பீடுகளைத் தயாரித்தல்"	36	2022.06.20		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -"வறுமை"	40	2022.06.27		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படை ஆண்டை மாற்றுதல் மற்றும் புதிய அடிப்படை ஆண்டு (2015) இன் கீழ் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மாற்றங்கள்"	60	2022.07.04		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு " இலங்கையில் பிரஜா உரிமையை இழந்தவர்கள் பற்றிய ஆய்வு"	21	2022.07.18		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு " கணக்கெடுப்பு முடிவுகள் மற்றும் பொருளாதார புள்ளிவிபரங்களின் சேகரிப்பு மற்றும் பரப்புதலுக்கான துறை ரீதியான வகைப்பாடு."	31	2022.07.25		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -" பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச அனுபவங்கள்"	50	2022.08.01		இணையம் :
Sampling Techniques for HH Surveys	28	2022.08.23,24,30,31,2022.09.06,07		நேரடி
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -" சனத்தொகை கணக்கெடுப்பும் இலங்கையின் மக்களியில் பின்னணியும்"	36	2022.08.08		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -"இலங்கையில் சனத்தொகையில் மாற்றம்"	65	2022.08.15		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு - இலங்கையில் உள்ளக புளப்பெயர்வின் புவி-இடவெளி விநியோக முறைகள்."	43	2022.08.22		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -"மக்களியல் உதவித்தொகை."	49	2022.08.29		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -" உத்தியோகபூர்வ வறுமைக் கோட்டினை இற்றைப்படுத்தல்'	79	2022.09.05		இணையம் :
Data Visualization	16	2022.09.06		நேரடி

உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -"தேசிய பல்பரிமான வறுமை சுட்டி"	52	2022.09.12		இணையம் :
அடிப்படை புள்ளிவிபரங்கள் (Basic Statistics)	26	2022.09.26	2022.10.04	நேரடி
STATA	28	2022.10.5,6,10,11,12		நேரடி
கணக்காய்வு விசாரணைகளுக்கு பதிலளித்தல்	33	2022.09.14		நேரடி
விடுமுறை குறித்த பயிற்சி	34	2022.09.20		நேரடி
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு "விஞ்ஞானபூர்வ தரவு மற்றும் தகவல்களின் அடிப்படையில் நகர்ப்புறங்களின் வகைப்பாடு."	49	2022.09.26		
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு " மக்களியல் இலங்கையின் பின்னணி மற்றும் உகந்த திட்டம்."	39	2022.10.03		
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -"பேண்தகு அபிவிருத்திக்கு திணைக்களத்தின் பங்கு"	30	2022.10.10		
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு இலங்கை தொழிற் படை கணக்கெடுப்பில் இருந்து கணக்கிடப்பட்ட பேண்தகு அபிவிருத்தி குறிகாட்டிகள்."	52	2022.10.17		
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு குடித்தன வருமான கணக்கெடுப்பில் இருந்து கணக்கிடப்பட்ட பேண்தகு அபிவிருத்தி குறிகாட்டிகள்."	41	2022.10.31		
சாரதிகளுக்கான போக்குவரத்து விதிகள் நிகழ்ச்சித்திட்டம்	20/28			
தமிழ் பயிற்சி வகுப்பு - சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலை சேவை நிலைகளின் அதிகாரிகள் (இரண்டாவது குழு II)	48	2021.04.21	2022.07.27	நேரடி
தமிழ் பயிற்சிநெறி - இரண்டாம் நிலை உத்தியோகத்தர்கள் (முதலாவது பிரிவு)	47	2022.06.02		நேரடி
தமிழ் பயிற்சி வகுப்பு - சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலை சேவை நிலைகளின் அதிகாரிகள் (மூன்றாவது குழு II)	54	2022.09.16		நேரடி
தமிழ் பயிற்சிநெறி - இரண்டாம் நிலை உத்தியோகத்தர்கள் (இரண்டாவது பிரிவு)	48	2022.09.16		நேரடி
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -" அநுராதபுரம்"	77	2022.11.14		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -" இரத்தினபுரி"	45	2022.11.21		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -" நுவரெலியா"	30	2022.11.28		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -" குருணாகல்"	35	2022.12.05		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -" கைத்தொழில் துறை"	32	2022.12.12		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -" கொழும்பு"	20	2022.12.19		இணையம் :

உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -" தமிழ் மொழி"	68	2022.11.09		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -" தமிழ் மொழி"	44	2022.11.16		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -" தமிழ் மொழி"	25	2022.12.21		இணையம் :
உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -" தமிழ் மொழி"	15	2022.12.28		இணையம் :
தமிழ் உத்தியோகத்தர்களுக்கான ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம்	36	2022.12.23		இணையம் :
Basic Demographic Techniques				
Operation and Preventive Maintenance of Diesel Generators (SDFL)	*1*	*22.12.2022*		
Digital technologies for Disaster risk Management	*1*	*21-25 Feb*		
Eco-based adaptation and risk reduction	*35*	*24,25 March*		
TOT-Washington Group Questions-Disability Statistics	*34*	*7,8,9 May*		
One day workshop on Small Area Estimation		*12 th Dec*		

திணைக்களத்தின் பெயர் : *அரசாங்க விலைமதிப்பீட்டு திணைக்களம்*

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. : *79*

நிலையியல் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்.

	நாடாளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல: 79 இல் தரப்பட்ட, தெரிவுக்குழுவால் அடையாளங்காணப்பட்ட குறைபாடுகள்	நிறுவனத்தால் குறைபாடுகளை நீக்குவதற்காக எடுக்கப்பட்ட படிமுறைகளுக்கு ஏற்ப தற்போதைய நிலைமை
	முதலாவது பகுதி: 87.00	
01	வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காமை	2022 ஆம் ஆண்டில் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு, 2021.12.23 இலும், பின்னர் திருத்தப்பட்ட வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் 2022.01.18 ஆம் திகதியும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்ட அமுலாக்கல் அமைச்சுக்கு அனுப்பப்பட்டது.
02	கணக்காளர் தலைமையதிபதியால் முன்வைக்கப்பட்ட எல்லாக் கணக்காய்வு ஐயவினா தொடர்பாகவும் மாதமொன்றினுள் பதிலளிக்கப்படாமை.	எல்லாக் கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் தற்போது வரை பதிலளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.
03	எல்லா வாகனங்களிலும் அரச இலச்சினை வரையப்படாமற் காணப்பட்டமை.	திணைக்களத்திற்குரிய எல்லா வாகனங்களுக்குமான அரச இலச்சினை காட்சிப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
04	வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகளில் காட்டப்படாத பொருத்தப்பட வேண்டியிருந்த மீதிகள் தொடர்பாக நிதி ஒழுங்குவிதிகளின்படி மாதமொன்றினுள் மீளச் செலுத்தப்படாதிருந்தமை. .	விலைமதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கான கட்டணங்கள் நாடு முழுவதிலுமுள்ள எந்தவொரு மக்கள் வங்கிக் கிளை மூலம், மருதானைக் கிளையில் பேணப்படும் விலைமதிப்பீட்டுத் திணைக்கள கணக்கில் வைப்பிட முடியுமெனினும், வைப்பாளரை அடையாளங் காண்பதில் தாமதம் உள்ளதுடன், தற்போது வரை இந்த நிலைமை கூடியவரை தவிர்க்கப்பட்டுள்ளது.
05	சேகரிக்கப்பட்டுள்ள வருமானம் நேரடியாக வருமானமாகக் காட்டப்படாது, வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருப்பதுடன், மாதமொன்றிற்கும் அதிகமாக வருமானமாகக் காட்டப்படாதுள்ளமை.	சேவைபெறும் நிறுவனங்களால் நாடு முழுவதும் மக்கள் வங்கிக் கிளைகளில் திணைக்களக் கணக்கிற்கு வைப்பிடப்படுபவைகளுக்கு உரிய ஆவணங்கள் அலுவலகத்திற்குக் கிடைக்கும்போது ஏற்படும் தாமதம் இதற்குக் காரணமாக உள்ளதுடன், உரிய காலத்தினுள் வைப்புகளை அடையாளங்காண்பதற்கான செயன்முறை எடுக்கப்பட்டுள்ளது.

06	அனுமதிக்கப்பட்ட வரம்பு முடிவடைவதற்கு முன்னர் பணியாளர்களை ஆட்சேர்த்தல்.	2022 ஆம் ஆண்டாகும்போது இந்தத் திணைக்களத்திற்காக அனுமதிக்கப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களது எண்ணிக்கை 104 ஆகும். 2022 ஆம் ஆண்டில் புதிய அபிவிருத்தி அலுவலர்கள் நியமிக்கப்பட்டபோது இந்தத் திணைக்களத்திற்காக 124 அபிவிருத்தி அலுவலர்கள் நியமிக்கப்படுவதை அடிப்படையாகக்கொண்டு இந்த நிலைமை உருவாகியது. ஆயினும், முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களது எண்ணிக்கை 183 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.
	இரண்டாவது பகுதி:76.00	
07	நிறுவனத்தில் இணையத்தளம் மூலம் பொதுமக்களது முறைப்பாடுகளை அல்லது பாராட்டுகளைத் தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்காமை.	திணைக்கள உத்தியோகபூர்வ இணையத்தளம் மீண்டும் விருத்திசெய்யப்பட்டு LGC- 11 வெளியில் தாபிக்கப்படுவதற்கு 2023 இல் ஏற்பாடு செய்யப்பட்டதுடன், புதிய இந்த இணையத்தளத்தில் பொதுமக்களது முறைப்பாடுகளை அல்லது பாராட்டுகளைத் தெரிவிப்பதற்கு இடம் வழங்கப்பட்டுள்ளது.
08	பிரசைகள் / சேவைபெறுவோர் பட்டயம் நடைமுறைப்படுத்தப்படுவது தொடர்பான மேற்பார்வையும் மதிப்பீடும் பற்றிய செயன்முறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	2020 இல் தயாரிக்கப்பட்ட பிரசைகள் / சேவைபெறுவோர் பட்டயம், திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வாளரால் வழங்கப்பட்ட சிபார்சும் யோசனைகளும் உள்ளடக்கப்பட்டு, மீண்டும் திருத்தியமைக்கப்பட்டதுடன், திருத்தப்பட்ட பட்டயத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2023.11.08 ஆம் திகதி எல்லா மாகாண அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. திருத்தம் மேற்கொள்ளப்பட்டதால் நடைமுறைப்படுத்தப்படுவது தொடர்பான மேற்பார்வையும் மதிப்பீடும் பற்றிய செயன்முறை தயாரிக்கப்படுதல் தாமதமடைந்ததுடன், அச்செயன்முறை தற்போது நடைமுறைப்படுத்தப்படுகிறது.
09	முழுமையான பணியாளர் தொகுதியை உள்ளடக்கிய செயற்றிறன் உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு, அவ்வாறான உடன்படிக்கை மேற்கொள்ளப்படாமை.	2023 ஆம் ஆண்டில் செயற்றிறன் உடன்படிக்கைகளைச் செய்வது கிரமமாக மேற்கொள்ளப்பட்டதுடன், 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் (1) ஆவது பந்தியின் திருத்தத்தின்படி 2024 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த செயற்றிறன் உடன்படிக்கை கைச்சாத்திடலானது இனிமேலும் தேவையற்றது எனக் காணப்பட்டது.
10	நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வு கருத்து ரீதியான மட்டத்தில் அல்லது பாதகமான மட்டத்தில் காணப்படுகின்றமை.	விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் பாதிப்பைத் தவிர, கணக்குக் கூற்றுகள் திருப்திகரமான மட்டத்திலேயே காணப்படுவதாகக் கணக்காய்வுக் கருத்துகளில் உள்ளதுடன், சாதகமானதொரு கணக்காய்வுக் கருத்து பெறப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
11	கணக்காய்வு அறிக்கையின் சிபார்சுகள் நடைமுறைப்படுத்தப்படாமை.	நிலுவை வருமானத்தைச் சேர்த்தல் தொடர்பான சிபார்சுகளின் பிரகாரம் அறவிடுவதற்காக எடுக்கப்படத்தக்க எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதுடன், அவற்றைப்

		பெற்றுக்கொள்வதற்கு நிதி ஒழுங்குவிதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.
12	எல்லா அலுவலர்களினதும் சொத்துக்களும் பொறுப்புகளும் பற்றிய வெளிப்படுத்தல்கள் முன்னளிக்கப்பட்டிருக்காமை.	2021 ஆம் ஆண்டிலிருந்து இது வரை சொத்துக்களும் பொறுப்புகளும் பற்றிய வெளிப்படுத்தல்களை முன்னளிக்க வேண்டிய அலுவலர்கள் அது குறித்து அறிவுறுத்தப்பட்டுள்ளனர். 2021 ஆம் ஆண்டிலிருந்து அலுவலர்களில் ஒரு பகுதியினர் மாத்திரம் சொத்துக்களும் பொறுப்புகளும் பற்றிய வெளிப்படுத்தல்களைச் சமர்ப்பித்துள்ளனர். 2023 ஆம் ஆண்டில் (2022.04.01 - 2023.03.31) இருந்து இது வரையான காலப்பகுதியினுள் சொத்துக்களும் பொறுப்புகளும் பற்றிய வெளிப்படுத்தல்கள் மீது முன்னைய வருடங்களிலும் பார்க்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டிற்குரிய சொத்துக்களும் பொறுப்புகளும் பற்றிய வெளிப்படுத்தல்களை வழங்கியுள்ள அலுவலர்களது பெயர்ப் பட்டியல் தற்போது நிதி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.
13	ஆகக்கூடிய சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் உரியவாறு இடமாற்றம் செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.	2024 ஆம் ஆண்டின் வருடாந்த இடமாற்றங்கள், இடமாற்றச் செயன்முறை மூலம் ஆகக்கூடிய சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்களை இடமாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. 79 இற்காக அரசாங்க விலைமதிப்பீட்டு திணைக்களம் தொடர்பாக நிலையியல் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை மேற்குறிப்பிட்டவாறு தயவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்
அரசாங்க பிரதான விலைமதிப்பீட்டாளர்
அரசாங்க விலைமதிப்பீட்டு திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : சட்ட அலுவல்கள் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. : *79*

நிலையியல் கட்டளை இலக்கம் *119(4)* இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்.

குழுவால் அடையாளம் காணப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள்	குறைபாடுகள்/ தற்போதைய நிலையை சரிசெய்வதற்கு நிறுவனம் எடுத்த நடவடிக்கைகள்
பகுதி 1: 98.00	
இடர்களின் பதிவு புதுப்பிக்கப்பட்ட முறையில் பராமரிக்கப்படவில்லை.	இடர்களின் பதிவு புதுப்பிக்கப்பட்டது.
பகுதி 2: 98.00	
அடையாளம் காணப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகளை செயல்படுத்துவதில் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு இலக்குகள் அமைக்கப்படவில்லை.	சட்ட விவகாரங்கள் திணைக்களத்தின் கடமைகளின் தன்மையை கணக்கில் எடுத்துக்கொண்டால், இந்தத் திணைக்களத்தால் நிலையான அபிவிருத்தி இலக்குகளை நேரடியாகச் செயல்படுத்துவதற்கான வாய்ப்புகள் இல்லை. எவ்வாறாயினும், இந்தத் திணைக்களத்தின் ஊடாக சட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும் போதும், நடைமுறையில் உள்ள சட்டங்களைத் திருத்தும் போதும், அடையாளம் காணப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகளை அமுல்படுத்துவதற்கான இலக்குகளுக்கு இணங்குவதை உறுதிசெய்யும் வகையில் அத்தகைய சட்டங்களை உருவாக்குவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம். சாத்தியமான அளவு. மேலும், நிதியமைச்சு தொடர்பான அமைச்சர்கள் அமைச்சரவைக்கு அவதானிப்புகளைத் தயாரிக்கும் போது, பொருத்தமான நிலையான அபிவிருத்தி இலக்குகளின் பின்னணியில் அவதானிப்புகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய அரசாங்க அமைச்சுக்களால் சட்டத் திருத்தங்கள் தொடர்பான முன்மொழிவுகள் முன்வைக்கப்படும் சந்தர்ப்பங்களில் நிலையான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றுவதற்கும் புதிய சட்ட ஏற்பாடுகளை சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

குடிமக்கள் சாசனம் / குடிமக்கள் வாடிக்கையாளரின் சாசனத்தை உருவாக்கி செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. குடிமக்கள் சாசனம்/குடிமக்கள் வாடிக்கையாளரின் சாசனத்தை செயல்படுத்துவதை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்கான வழிமுறைகள் நிறுவனத்தால் உருவாக்கப்படவில்லை.	நிதி முகாமைத்துவம் தொடர்பான பல்வேறு விதிமுறைகள் மற்றும் வரைவு சட்டமூலத்தினை உருவாக்குவது தொடர்பான சட்ட வரைவுத் திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைக்கும் செயல்பாட்டில் சட்ட விவகாரங்கள் திணைக்களம் ஈடுபட்டுள்ளதுடன் நிதி அமைச்சும் மற்றும் அதன் கீழ் உள்ள துறைகள் தொடர்பான புகார்கள் மற்றும் பல்வேறு ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய சட்ட விடயங்கள். இருப்பினும், இது பொது மக்களுடன் நேரடியான முறையில் கையாள்வதில்லை. எனவே, குடிமக்கள் சாசனம்/ குடிமக்கள் வாடிக்கையாளரின் சாசனம் தயாரிக்க வேண்டிய அவசியமில்லை என்பது கவனிக்கப்படுகிறது.
2018.01.24 ஆந் திகதிய 02/2018 பொது நிர்வாக சுற்றறிக்கையின் அடிப்படையில் முறையான மனித வள மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட மனித வள மேம்பாட்டுத் திட்டம், 50% க்கும் அதிகமான ஊழியர்களுக்கு ஆண்டுக்கு குறைந்தபட்சம் 12 மணிநேரத்திற்குக் குறையாமல் பயிற்சிக்கான வாய்ப்பை வழங்கவில்லை.	2023 ஆம் ஆண்டிற்கான மனிதவள மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது. கூறப்பட்ட திட்டத்தின் அடிப்படையில், 50% க்கும் அதிகமான மொத்த ஊழியர்களுக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேரத்திற்கு குறையாமல் பயிற்சி வாய்ப்பு வழங்கப்படுவது உறுதி செய்யப்பட்டது.
வருடாந்த செயல்திறன் ஒப்பந்தம் முழு ஊழியர்களையும் உள்ளடக்கியதாக தயாரிக்கப் படவில்லை மற்றும் அத்தகைய ஒப்பந்தங்களில் கையெழுத்திட வில்லை.	முழு ஊழியர்களையும் உள்ளடக்கிய செயல்திறன் ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டு அவர்களுடன் 2023 ஆம் ஆண்டிற்கு உட்பட்டது.
மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தை உருவாக்குவதற்கும் திறன் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் நிறுவனத்தில் மூத்த அதிகாரி நியமிக்கப்படவில்லை.	மூத்த அதிகாரி ஒருவர் 2023.04.03 அன்று பரிந்துரைக்கப்பட்டு அது பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு தெரிவிக்கப்பட்டது.
திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் சதவீதம் 50% க்கும் குறைவாகவே இருந்தது.	தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இல. 05/2022 இற்கு இணங்க 2023 ஆம் ஆண்டில் இந்தத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பு 2404 இன் கீழ் உள்ளூர் பயிற்சிகளுக்கு எந்தவொரு வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளும் கிடைக்கப்பெற்ற சூழலிலும் கூட, வரவு செலவுத் திட்டம் அல்லாத பயிற்சி வாய்ப்புகள் மிகவும் சாத்தியமான அளவிற்கு வழங்கப்பட்டன. 2024 ஆம் ஆண்டிற்கான போதிய ஒதுக்கீடுகள் உள்ளன. அதன்படி, அனைத்து அதிகாரிகளாலும் விண்ணப்பித்த பயிற்சி வாய்ப்புகள், அவர்களின் தகுதிகளை பூர்த்தி செய்ய முடிக்கப்பட வேண்டிய பயிற்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் வகையில் வழங்கப்படுகிறது. மேலும், அதிகாரிகள் தங்கள் கடமைகள் தொடர்பான பயிற்சி வாய்ப்புகளைப் பெறுவதற்கு எல்லா நேரத்திலும் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.
அதிகாரிகளால் அரசுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை அறவிடுவதற்கு நிதி பிரமானத்தின் 156(1)ன் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	நிதி பிரமானத்தின் 104(1) (அ) சம்பந்தப்பட்ட விடயத்தின் மீதான விசாரணை மற்றும் பொறுப்பை நிர்ணயம் செய்வதற்கான அறிக்கை அவர்களின் பரிந்துரைகளுடன் தொகுக்கப்பட்டுள்ளது. அறிக்கையில் உள்ள பரிந்துரைகளின்படி, இடமாற்றத்திற்கு காரணமானவர்களைத் தீர்மானிப்பது முக்கியமாக அறிவியல் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட

	பொலிஸ் விசாரணைக்கு இணங்க வேண்டும்இதன்படி, கோட்டை பொலிஸ் நிலையத்தில் அடிக்கடி நினைவூட்டல் மூலம் வினவப்பட்டதுடன், மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய எதிர்கால நடவடிக்கைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும்.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. *79* இற்காக சட்ட அலுவல்கள் திணைக்களம் தொடர்பாக நிலையியல் கட்டளை இலக்கம் *119(4)* இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை மேற்குறிப்பிட்டவாறு தயவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்

பணிப்பாளர் நாயகம்
சட்ட அலுவல்கள் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. : 79

நிலையியல் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்.

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
முதலாவது பகுதி: 95.00	
பொருள் விவரப் பட்டியல் அட்டவணை இற்றைப்படுத்தியதாக பேணப்படவில்லை.	இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.
சேதங்கள் பற்றிய அட்டவணை இற்றைப்படுத்தியதாக பேணப்படவில்லை	இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.
